கைத்தறி

ஆசிரியர்: எம். கே. சாமி.

மாதப் பத்திரிகை ★ விலை அணா நான்கு

தறி 2 | கோவை, 15—7—1951 | பாவு 9

இந்த இதழில்

- சேலத்தில் தலைகீழ் நிலைமை!
- முடிந்துவிட்ட சென்னைப் போராட்டம்!
- இயன்றதை இல்லையென்னாது கொடுங்கள்.
- தொழிலின் பொதுப் பிரச்னைகளைத் தீர்க்க கோவை ஜில்லா கைத்தறி போர்டு

CONNEMARA PUBLIC LIBRARY 29 MAY 1955 MADRAS

ஆக. 1. "நெசவாளர் தினம்"

உலக நாடுகள் எல்லாவற்றிலும் உள்ள மக்கள் அவரவர்களின் சமூக, தேசிய, பொருளாதார விடுதலைகள் பற்றிய நினைவு நாட்களை ஆண்டுதோறும் கொண்டாடுகிறார்கள். நம் நாட்டிலும் ஆகஸ்ட் 9-ம் தேதியை இந்திய விடுதலைப் புரட்சிக்கு வித்திட்ட நாளாக நாம் இங்கு கொண்டாடுகிறோம.

மற்றும் வெள்ளை ஏகாதிபத்தியத்தின் கொடுமை மிக்க ஆட்சிக்கெதிராக குருதி சிந்தி உயிர் நீத்த எண்ணற்ற தலைவர்களை—தொண்டர்களை—மக்களை நினைவுபடுத்திக்கொள்ள நாம் பல ஞாபகார்த்த நாட்களைக் கொண்டாடுகிறோம்.

அதேபோல பிரஞ்சு பாட்டாளி வர்க்கம் பாரிஸ் கம்யூனை நினைவு நாளாக — ஏன்? லட்சிய நாளாகக் கொண்டாடுகிறது. சோவியத் ரஷ்யத் தொழிலாளி தனது வாழ்க்கையை வளப்படுத்திக்கொடுத்த அக்டோபர் புரட்சியைத் தனது புனித நாளாகக் கொண்டாடுகிறான். பொருளாதாரத் துறையில் விடுதலை கிட்டாத—முதலாளித்வ, நிலப் பிரபுத்வக் கொடுங்கோலாட்சிகளுக்கெதிராக ஏழைப்பட்ட மக்கள் எண்ணற்ற நாடுகளில் இன்னும் தங்களது உரிமைகளை வரையறுத்துப் போராடிக்கொண்டுதான் வருகிறார்கள்.

உரிமைகளைப்பற்றிய வைபவங்கள் நடக்கிறபோதே, தங்களின் கடமைகளைப்பற்றியும் மக்கள் விழாக் கொண்டாடுவதில் எந்நாட்டிலும் தவறுவதில்லை. இலக்கிய கர்த்தாக்கள் கூட, தங்களின் ஆதர்ச புருஷர்களாக இருக்கும் மகாகவி பாரதி, கவி தாகூர், கம்பர், காளிதாசன் நாட்களையும், ஷேக்ஸ்பியர், பர்னாட்ஷா, அறிஞர் மார்க்ஸ், காந்திஜி போன்ற உலக மேதைகளின் நாட்களையும் கொண்டாடாமல் விடுவதில்லை.

இப்படி மக்கள் கூட்டத்தின் பல்வேறு பகுதியினரும் தங்கள் தங்கள் உரிமைகள், கடமைகள் பற்றிய நாட்களைக் கொண்டாடும் போது, சென்னை ராஜ்ய நெசவாளர்களும் **நெசவாளர் தினம்** கொண்டாடுவது நியாயமே.

சென்ற ஆண்டு ஆகஸ்ட் மாதம் 1-ந் தேதியன்று சேலம் நெசவாளர்கள், நெசவாளர் தினம் கொண்டாடி இந்த ராஜ்ய நெசவாளர்களின் மத்தியில் தங்களது உரிமையை வலியுறுத்தும் தினமாக அந்நாளைசரித்திரத்தில் இடம் பெறச்செய்தனர். அதையொட்டி ராஜ்யத்தின் பல்வேறு பகுதியிலும் உள்ள கைத்தறி நெசவாளர்கள், அவரவர்களது வட்டாரத்தில் உள்ள தங்களின் ஜீவாதாரமான உடனடிப் பிரச்னைகளைக் கோரிக்கைகளாக்கி அத்தினத்தில் வலியுறுத்தினர்; அக்கோரிக்கைகளைப் பெறப் போராடத் திட்டமிட்டனர்.

அந்த கோரிக்கைகளின் அடிப்படையில் ராஜ்யத்தின் பல்வேறு பகுதிகளிலும் கைத்தறி நெசவாளர்கள் இந்த ஓராண்டாக நடத்திய போராட்டங்களின் முடிவுகள் எந்த அளவிற்கு வெற்றியளித்துள்ளன என்பது பிரசித்தமானது. இந்தக் காலங்களில் ஆயிரக்கணக்கான பேர்—தாய்மார்கள் — கைக்குழந்தைகள் உள்பட சிறை சென்றனர்;

பட்டினிச் சாவுக்குச் சிலர் பலியாயினர்.

இருந்தும் நிலைமை பூரணமாக இன்று சீர்பட்டுவிட்டதாகச் சொல்லமுடியாது. இதற்கு ராஜ்ய சர்க்கார்தான் காரணமென்று சொல்லமுடியாது. டெக்ஸ்டைல் கொள்கை அகில இந்திய அடிப்படையில் மத்ய சர்க்காரால் வகுக்கப்படுகிறது. அக்கொள்கையின் வரையறுப்பை நிர்ணயிப்பதில் இந்த ராஜ்யத்தைச் சேர்ந்த கைத்தறி நெசவாளர்களுக்குப் பங்கு கிடையாது. அதற்குப் பதிலாக இந்திய டெக்ஸ்டைல் மில் முதலாளிகளுக்குத்தான் அதில் பிரதானமான பங்கு உண்டு.

மில் முதலாளிகள், தங்களின் லாப நலனை அடிப்படையாகக் கொண்டு கூறுகிற யோசனைகள்- உள்நாட்டு மக்களின்—கைத்தறி நெசவாளர்களின் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்காது என்பது தெளிவு. ஆகையால்தான் இன்றும் கூட நிலைமை சீர்படவில்லை—நெசவாளர்களின் வாழ்வு வளப்படவில்லையென்று நாம் கூறுகிறோம்.

கடந்த ஆண்டு வேலைக்கு நூல் போதுமான அளவு கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கைதான் நெசவாளர்களிடையே பிரதானமானதாக இருந்தது. இன்று தாங்கள் உற்பத்தி செய்யும் துணியை விற்பனை செய்து தர மார்க்கெட்டும் தேடிக்கொடுக்க வேண்டுமென்று நெசவாளர்கள் கோரவும் — அந்தத் துறையில் சர்க்கார் தேடித் தரவுமான ஓர் புதிய பிரச்னையும் உடன் பிறந்துவிட்டது.

கைத்தறி உற்பத்திகளுக்கு மார்க்கெட் இல்லையென்றால் நெசவாளர்களிடையே தோன்றியுள்ள இன்றைய நெருக்கடியின் ஆழம், சுடுகாட்டுப் புதைகுழியாக மாறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இந்நிலைக்குக் காரணம் என்ன?

நூலை ஏற்றுமதி செய்யாதே! எங்களின் தொழில் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு முதல் ஸ்தானம் கொடு! என்று நெசவாளர்கள் சர்க்காரை நோக்கிக் கேட்டார்கள். சர்க்கார் இக்கோரிக்கையின் நியாயத்தை உடனே ஒப்புக்கொள்ளவில்லையெனினும், பல ஆயிரம் நெசவாளர்கள் சிறை செல்லத் துணிந்துவிட்ட பின்பே அதை ஒப்புக்கொண்டனர்.

நூலை ஏற்றுமதி செய்வதைத் தடை செய்த நேரத்திலேயே, மில் துணி ஏற்றுமதியையும் கணிசமாக குறைத்தனர். காரணம்; உள்நாட்டுத் துணிப் பஞ்சத்தைப் போக்குவதற்காக என்று கூறினர். ஒப்புக்கொள்ள வேண்டியதுதான். உள்நாட்டில் அத்யாவசியத் தேவைப் பண்டங்களுக்கு மிகக்கடுமையான தட்டுப்பாட்டை உண்டாக்கிவிட்டு, வெளிநாடுகளின் வியாபாரத்தில் அக்கறை காட்டுவதையோ, லாப மடிப்பதையோ தடை செய்ய வேண்டுமென்ற சர்க்காரின் கொள்கையென்னவோ சரிதான்.

அதனாலேயே கொள்கை, நடைமுறைக்கு வரும்போது செய்கிற திருவிளையாடல்களை முன்கூட்டியே பார்க்காமல்விட்டுவிடவேண்டுமென்பதில்லை.

உதாரணமாக, சென்னை ராஜ்த்திற்கு சென்ற ஜூன் மாதம் 19 ஆயிரம் பேல் மில் ஜவுளி ஒதுக்கப்பட்டது. அதே காலத்தில் தபால் பார்சல் மூலமாக தினசரி கோவை, பவானி, சேலம், மதுரை போன்ற இடங்களிலிருந்து வட இந்திய மாகாணங்களுக்கும் — சமஸ்தானங்களுக்கும் தபால் பார்சல் மூலமாக ஆயிரக்கணக்கில் சென்றுகொண்டிருந்த 100 நெ. புடவை ரகங்கள், ஜமக்காளங்கள், தாவணிகள் போன்ற ரகங்களை அனுப்பக் கூடாதெனத் தடையும் விதித்துவிட்டனர். இதனுடைய விளைவாக ஓரளவு கைத்தறி ஜவுளி வர்த்தகம்பாதிக்கப்பட்டிருப்பதுடன், விலையும் இறங்கி நெசவாளியின் கூலியில் வெட்டு ஏற்பட்டுவிட்டது.

தபால் பார்சல் மூலமாக இந்த ராஜ்யத்திலிருந்து, வட இந்தியாவிற்கு பூணூல் மட்டும் அனுப்பலாம். மக்களின் உயிர் வாழ்க்கைக்கு எவ்வளவு அவசியமான பொருள் பாருங்கள் பூணூல்! இது போன்ற புரிந்துகொள்ள முடியாத உத்திரவுகள் எண்ணற்ற இடைஞ்சல்களை கைத்தறி நெசவாளர்களுக்கு உண்டாக்குகிறது என்பதை என்னதான் எடுத்துக் கூறினாலும் இவர்கள் உணருவதேயில்லை.

உள்நாட்டில்—இதர ராஜ்யங்களின் மக்களின் தேவைக்கான கைத்தறி ரகங்கள் இங்கு பல்லாயிரக்கணக்கான தறிகளில் தயார் செய்யப்படுகிறது. அந்த ரகங்கள் அங்கு சுலபமாக விற்கவும் முடிகிறது. அவைகளை அனுப்ப வேண்டாம் என்று கூறுகிற அதே மூச்சில், இங்கு மில்துணியை அதிகமாக இறக்குமதி செய்தால் உண்மையிலேயே அந் நடவடிக்கை தறிகாரர்களுக்கு உதவியாக இருக்க முடியுமா என்பதைச் சிறிது யோசித்துப் பார்க்க வேண்டும்.

ஆகவே, கைத்தறி நெசவாளி தனது வாழ்க்கையில் நிம்மதி காணும் வரை தனது உரிமையை சங்க ரீதியாக வெளிப்படுத்த ஆண்டுதோறும் உரிமை நாளான "நெசவாளர் தினத்தை" அவன் கொண்டாடியே தீரவேண்டிய நிர்ப்பந்தத்தை சர்க்காரின் டெக்ஸ்டைல் கொள்கையே உண்டாக்கி விடுகிறது என்று நிச்சயமாகச் சொல்லலாம்.

இந்த ஆண்டு வரும் ஆகஸ்ட் 1-ந் தேதி தமிழ்நாட்டில் உள்ள கைத்தறி நெசவாளர்கள், போதுமான நூலுக்கும், தங்களின் உற்பத்திச் சரக்குகளை விற்பனை செய்து தர ஓர் நிரந்தர மார்க்கெட் தேடித்தரக் கோரியும் தங்களின் தினத்தைக் கொண்டாட வேண்டுமென்று நாம் கேட்டுக் கொள்கிறோம்.

பொது மக்களிடம் அத்தினத்தில் கைத்தறி ஆடைகளையே

(23ம் பக்கம் பார்க்க:)

கைத்தறித் துணிக்கு...,
தபால் பார்சல் தடைகூடாது!

தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கைத்தறிகளில் தயாரிக்கப்படும் சில குறிப்பிட்ட ரகங்கள் இந்த ராஜ்யத்திற்குள்ளேயே விற்கப்படுவது கிடையாது. மதுரைத்தாவணி, கோவை 100 நெ. மெல்லிய புடவை, எழில் மிக்க பவானி ஜமக்காளம், மேலப்பாளையம் லுங்கி, சென்னை கைக்குட்டை, கிங்காம் ஷர்ட்டிங் இன்னும் உருமால், பேட்டா போன்ற எண்ணற்ற ரகங்கள் எல்லாமே ஐக்ய மாகாணம், வங்க மாகாணம், மத்தியப் பிரதேசம் போன்ற வட இந்தியப் பகுதிகளில்தான் அதிகம் விற்பனையாகின்றன.

இவைகளில் சில ரகங்கள் பாகிஸ்தானிலும், சிலோன், மலேயா போன்ற நாடுகளிலும் விற்பனை ஆகின்றன.

உள்நாட்டில் இந்த ரகங்களை நேரடியாகவோ, பார்சல் மூலமாகவோ விற்பதில் இதுவரை எவ்விதத் தடையும் விதிக்கப்படவில்லை. இப்போது மததிய சர்க்கார் சென்னை ராஜ்யத்திலிருந்து வெளிமாகாணங்களுக்குத் தபால் பார்சல் மூலமாக கைநெசவு ஜவுளிகள் அனுப்புவதை சமீபத்தில் தடை செய்துவிட்டனர்.

துணியென்று சொல்லி நூலையே சிலர் தபாலில் பார்சல் செய்துவிடுகிறார்கள்; எனவேதான் தடை விதிக்கப்பட்டது எனக்காரணம்சொல்லப்படுகிறது அம்மாதிரி அனுப்பியவர்கள் யாரோ அவர்கள்மீது சட்டப்படி கோர்ட்டில் நடவடிக்கையெடுத்துக்கொள்ளாது கண்ணை மூடிக்கொண்டு கைத்தறி ஜவுளியையே தபால் பார்சல் மூலமாக அனுப்பக்கூடாது என்று தடைவிதிப்பதானது இத்தொழிலின் அமைப்பும், அதை நம்பி நிற்பவர்களின் வாழ்க்கை வசதியும் என்ன என்று தெரியாதவர்கள் செய்ய வேண்டிய வேலையாகவேதான் இதை நாம் கருதநேருகிறது.

கோவை, பவானி போன்ற ஊர்களில் உள்ள கைத்தறி ஜவுளி உற்பத்தியாளர்களில் பலர் இந்த உத்திரவால் எவ்வாறு தங்களின் வர்த்தகம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை விவரித்து நமக்குக் கடிதங்கள் எழுதுகின்றனர் நேரில் அழாக்குறையாகப் புகார் செய்கின்றனர்.

யாரோ சில "காவாலிகள்" நூலைத் துணியென்று தபாலில் அனுப்பிய செயலுக்காக, பெரும்பாலான வியாபாரிகளும், அந்த ரகங்களை உற்பத்தி செய்யும் நெசவாளர்களும் பாதிக்கும்படியாக உததிரவிடுவதென்பது எலிக்குப் பயந்து வீட்டை நெருப்பிட்ட கதையாகத் தான் இருக்கிறது.

நூற்றுக்கணக்கான பார்சல்கள் இன்று நின்று போய்விட்டன. அதனல் ஆயிரக்கனக்கான ரூபாய்களுக்கு தினசரி நடந்துகொண்டிருந்த வர்த்தகம் பாழாக்கப்பட்டுவிட்டது. இந்த நிலைமை மாறவேண்டுமென்று நாம விரும்புகிறோம். இதுவிஷயமாக சம்பந்தப்பட்டவர்கள் அண்மையில் சென்னை கைத்தொழில் மந்திரி கனம். பெருமாள்சாமி ரெட்டியாரைச் சந்திதது தபால் பார்சலுக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டுள்ளனர்.

தொழில் அமைச்சரும் தம்மாலானதை இதுவிஷபத்தில் செய்வதாக பேட்டி கண்டவர்களுக்கு வாக்குறுதியளித்துள்ளார். அவ்வாக்குறுதி நிறைவேற்றப்படவேண்டுமென நாம வற்புறுத்துகிறோம்.

— எம். கே. எஸ்.

கண்ணைக் கவரும்
* எண்ணற்ற *
கைத்தறி ஜவுளி ரகங்கள்
மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்குமிடம்
காமதேனு டெக்ஸ்டைல்ஸ்
ஈஸ்வரன் கோவில் தெரு—ஈரோடு.

ஜி. ஓ. நெ. 2411ஐ வாபஸ் பெறவும்.

ஈரோடு, ஜூலை 4—

"சர்க்காரின் 28-5-51 தேதிய ஜி. ஓ. நெ. 2411ன்படி நெசவாளர்களுக்கு கொடுக்கும் நூல் தொழிலுககு எவ்விதத்திலும் போதுமானதாக இல்லாததுடன் அவர்களின் வாழ்க்கையை மிகவும் பாதிக்கவும் செய்கிறது. குறைந்த பட்சம் தறி 1-க்கு மாதம் ஒரு கட்டு நூலாவது சப்ளை செய்ய வேண்டுவதோடு மேற்படி ஜி. ஓ. வை ரத்து செய்ய வேண்டுமாயும்",

"ஈரோடு ஏரியாவில் நெசவாளர்களுக்கு நூல் கொடுத்து 3 மாதம் ஆகிறது. இந்த நிலையில் சர்க்காரின் ஜி. ஓ. நெ. 2411படி நூல்தான் இப்போது தறிகளுக்குக் கொடுககப்படுகிறது. நெசவாளர்களை அவமதிக்கும் நூல் வினியோகமாகவே இது இருப்பதால், மாதா மாதம் ஒழுங்காக ஒரு கட்டு நூல் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமாய் இக்கூட்டம் சர்க்காரை கேட்டுக்கொள்கிறது" என்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

தறி ஒன்றுக்கு 4 அணாவீதம் சங்கத்திற்கு நன்கொடை வசூலிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது. கூட்டம் கோட்டையில் சங்கக் காரியதரிசி ஜி. ஷண்முகம் வீட்டில் நடைபெற்றது. தலைவர் எஸ். பி. கருப்பண்ண முதலியார் தலைமை வகித்தார்.

கைத்தறித் தொழிலின் பொது பிரச்னைகளைப் பரிசீலிக்க,

கோவை ஜில்லா கைத்தறி போர்டு அமைக்கப்பட்டது.

கைத்தறி நெசவுத் தொழிலின் பல்வேறு பிரிவுகளிலும் ஈடுபட்டுள்ளவர்கள் ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட, கோவை ஜில்லாகைத்தறி போர்டு என்ற பெயரில் ஒரு ஸ்தாபனம் அமைப்பதற்கான பூர்வாங்கக் கூட்டமொன்று, கோவை சுக்ரவாரப்பேட்டையிலுள்ள பொது நலச்சங்ககட்டடத்தில்24-6-51 தேதியன்று நடைபெற்றது.

கூட்டத்திற்கு ஈரோடு தாலூக்கா திங்சளூர் நெசவாளர் கூட்டுறவு சொஸைட்டியின் அங்கத்தினர் திரு. ஆர். திருமூர்த்தி முதலியார் அவர்கள் தலைமை வகித்தார். ஈரோடு, பவானி, அவிநாசி, பல்லடம், பொள்ளாச்சி, கோவை, தாராபுரம் ஆகிய தாலூக்காக்களிலிருந்து கைத்தறி நெசவுத்தொழிலாளர் ஸ்தாபனங்கள், வீவிங் பாக்டரி சொந்தக்காரர்சங்கங்கள், சாய, அச்சுத தொழில் ஸ்தாபனங்கள், கூட்டுறவு நெசவாளர் சொஸைட்டிகள், நூல் ஆலோசனைக் கமிட்டிகள் போன்ற பல்வேறு தொழில் பிரிவு ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு பூர்வாங்கக் கூட்டத்தை சிறப்பித்தார்கள்.

உத்தேச கைத்தறி போர்டின் பூர்வாங்கக் கூட்டம் வெற்றிகரமாக நடைபெற வாழ்த்தி மாகாண நெசவாளர் கூட்டுறவு சொஸைட்டியின் உபதலைவரும், ராஜ்ய கைத்தறி கமிட்டி மெம்பருமான திரு எம். பி. நாச்சிமுத்து முதலியார் பி. ஏ. பி. எல்., அவர்களும், மாகாண காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினரும், தாராபுரம் தாலூக்கா மாஸ்டர் வீவர்கள், நெசவாளர்கள் சங்க காரியதரிசியுமான திரு. ப. து. வடிவேல் அவர்களும் தங்களது வாழ்த்துச் செய்திகளை அனுப்பியிருந்தனர்.

கைத்தறி போர்டின் நோக்கம் அதனுடைய அவசியம் குறித்து கோவை "கைத்தறி" பத்திரிகை ஆசிரியர் திரு. எம். கே. சாமி பேசுகையில் குறிப்பிட்டதாவது;-

"கைத்தறி நெசவுத்தொழிலில் இந்த ஜில்லாவில் 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட நெசவாளர்களும, ஆயிரக்கணக்கான சாய, அச்சுத தொழிலாளர்களும், பாஸ்டர்வீவர்களும்சாயச்சாலைக்காரர்களும், பட்டு, நூல் முறுக்குவோரும், பாவு வீசுவோரும் ஈடுபட்டுள்ளார்களென்றும், அவர்களின் தனித்தனி கோரிக்கைகளைப் பூர்த்தி செய்து கொள்ள தங்களுக்கென ஒவ்வொரு தொழில் பிரிவினரும் பிரத்யோகமாக சங்கங்கள் ஏற்படுத்திக் கொண்டுள்ளார்களென்றும், ஆனால் இத்தொழிலில் ஈடுபட்டுள்ள அனைவரையுமேபாதிக்கும்படியானபொதுப் பிரச்னைகளைப் பரிகரித்துக் கொள்ள ஒரு பொதுவானமுடிவுக்குவர எவ்வித பொதுஸ்தாபனமும் இந்த ஜில்லாவில் இல்லையென்றும் குறிப்பிட்டார்

மேலும், ராஜ்யம் முழுவதுமுள்ள இத்தொழிலின் பிரச்னைகளைப் பரிசீலிக்கவும், ஆலோசனைகள் கூறவும் சர்க்கார் ராஜ்ய கைத்தறி கமிட்டியேற்படுத்தியுள்ளார்களென்றும், அதே போல ஜில்லா ரீதியாக கைத்தறி போர்டுகள் அமைக்கும் ஆலோசனையொன்று சர்க்காரிடம் இருந்ததென்றும், ஆனால்; எக்காரணத்தாலோ அத் திட்டம் அமுலுக்குவராமலேயே இருந்து வருகிறதென்றும்,எனவேஜில்லா முழுவதற்குமாக கைத்தறித் தொழில்சம்பந்தப்பட்டபல்வேறு பொதுப்பிரச்னைகளையும்சரியான முறையில் தீர்த்துக்கொள்ளவும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடும், சர்க்காரோடும் தொடர்பு கொண்டு கிரியாம்சையில் நல்ல சாதனைகளை சாதித்துக் கொள்ளவும் அமைக்கப் போகும் போர்டு உதவியாக இருக்குமென்றும் கூறினார்.

தொடர்ந்து பேசுகையில், இது எந்த ஒரு ஸ்தாபனத்திற்கும் எதிரானதல்லவென்றும், இது அரசியல் மாச்சரியங்களுக்கு இலக்காகாத கைத்தறி நெசவுத் தொழில் பற்றிய பொதுவான பிரச்னைகளை ஆராயும் ஓர் குழுவாகவே இயங்குமென்றும், இந்த போர்டில் இணைந்து கொள்ள விரும்பும், கைத்தறித் தொழில் சம்பந்தப்பட்ட எந்த ஒரு ஸ்தாபனமும் அது தான் பின்பற்ற விரும்புகிற அரசியலில் இந்த போர்டு தலையிடாதென்றும், அதற்குக் காரணம்; இதற்கென ஓர் அரசியல் லட்சியமோ, கொள்கையோ இல்லாததுதான் என்றும் குறிப்பிட்டார்.

கைத்தறி நெசவுத் தொழில் சம்பந்தமாக சர்க்கார் அவ்வப்போது இடும் உத்திரவுகளில் உள்ள நல்ல அம்சங்களை வரவேற்கவும், அதன்பலனை எல்லோரும் அனுபவிக்கும் முறையில் அவ்வுத்திரவுகளை, நடை முறையில்

அமல் நடத்த ஜில்லா அதிகாரிகளைத் தூண்டி அவர்களோடு ஒத்துழைக்கவும், தீங்கு விளைவிக்கும் அம்சங்களை எவ்வெவ்வகைகளில் தீங்கு ஏற்படுகிறது என்பதை சர்க்காருக்கு விளக்கி சொல்லி விமர்சித்து அதைநிறைவேற்றக் கூடாதென சர்க்காரிடம் அணுகுவதும்தான் இந்தபோர்டின் பிரதான குறிக் கோளாக இருக்குமென்றும் சொன்னார்.

வந்திருந்த பிரதிநிதிகளின் பல்வேறு சந்தேகங்களுக்கும், விளக்கங்கள் கேட்டு கேட்கப்பட்ட கேள்விகளுக்கும் பதில் கூறப்பட்டது. பிரதிநிதிகள் போர்டு அமைக்கப்பட வேண்டிய நோக்கத்தையும், அரசியல் சார்பற்ற அதனின் தூய்மையான தொழில் முன்னேற்ற லட்சியத்தையும் ஏற்றுக் கோண்டு, கோவை ஜில்லா கைத்தறி போர்டு என்ற ஸ்தாபனத்தை அமைக்க ஏற்றுக் கோண்டனர்.

பின் கீழ்க் கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டு ஜில்லா கைத்தறி போர்டுக்கு ஒரு இடைக்கால நிர்வாகக் குழுவை பிரதிநிதிகள் தேர்ந்தெடுத்தார்கள். தீர்மானங்களாவது:—

போர்டு அமைக்க சம்மதம்

கோவை ஜில்லாவின் கைத்தறித் தொழில் சப்பந்தப்பட்ட பல்வேறு பிரிவினருமடங்கிய இக் கூட்டம், தொழில் வளர்ச்சிக்கும், அதன் அபிவிருத்திக்கும் ஆன சரியான திட்டம் வகுத்து நடத்திச் செல்ல ஒரு ஜில்லா கைத்தறி போர்டு அமைக்க வேண்டிய அவசியத்தை ஏற்றுக் கொண்டு, அப்படிப்பட்ட நடவடிக்கைக்கு அடிகோலுவதற்கு சம்மதத்தை இக் கூட்டம் அளிக்கிறது.

கட்டாய நூல் பங்கீடு வேண்டும்,

இன்றுள்ள நூல் வினியோக முறையில் எண்ணற்ற ஊழல்கள்தான் மலிந்து நிற்கின்றன. அதற்கு அடிப்படைக் காரணம்; நூல் கட்டாயப் பங்கீடு முறை அமலில் இல்லாதது தான் என்பது தெளிவு. எனவே, நூலில் கட்டாயக் கொள் முதலும், கட்டாயப் பங்கீடும் அமுல் படுத்த சர்க்கார் முன் வந்தாலன்றி நெசவாளிக்கு நிச்சயமான நல் வாழ்வளிக்க முடியாது என்பதை இக்கூட்டம் வற்புறுத்தி எடுத்துக் காட்டுகிறது.

போலித் தறிகள் ஒழிய!

போலித் தறிகளை சர்க்கார் ஒழிக்க வேண்டுமென்று விரும்புவதை இக் கூட்டம் மனப் பூர்வமாக வரவேற்கிறது. ஆனால்; இரண்டு மாதத்திற்கு ஒரு தடவை 1லிருந்து 3 பவுண்டு வரை மட்டுமே தறிகளுக்கு நூல் கொடுத்து விட்டு, மாதம் எல்லாம் தறிகள் வேலை செய்யும் என்று எண்ணுவதைத்தான் ஏற்றுக் கொள்ள முடியாமலிருக்கிறது. தறிகள் மாதத்தில் குறைந்த பட்சம் 20 நாளாவது வேலை செய்யத் தாராளமாக நூல் கொடுத்தாலன்றி உண்மைத் தறிகள் எது? போலித் தறிகள் எது? என்பதைக் கண்டு பிடிக்க முடியாது என்பதை சர்க்காருக்கு எடுத்துக் காட்ட இக்கூட்டம் விரும்புகிறது.

துணியைத் தரப்படுத்த....

கைத்தறித் துணியின் சரித்திரத்திலே என்றும் அதற்கென ஓர் நிரந்தரமான மார்க்கெட் இருந்து வந்தது இல்லையென்பது யாவரும் அறிந்த உண்மையாகும். அதற்குக் காரணம்; துணியின் தரம் எப்போதும் ஒரே மாதிரி இல்லாமல்—மார்க்கெட்டின் தேவை, கூடிய விலை போன்ற நிலவரங்களை நிலைக்களனாகக் கொண்டு ஸ்திரமற்ற முறைகளில் துணியின் தரத்தைக் கூட்டியும், குறைத்தும் விடும் ஊசலாட்ட ஏற்பாடுதான் என்பது தெளிவானது.

எனவே, கைநெசவு ஜவுளிகளுக்கு ஸ்திரமான மார்க்கெட்டைத் தேடிக் கொடுக்க துணியின் தரத்தை உயர்த்திப் பாதுகாக்கப்பட வேண்டியிருப்பது மிக அவசியமாகிறது. இந்த உண்மையை உணர்ந்த ராஜ்ய கைத்தறி கமிட்டி அதற்கான ஓர் மசோதாவையும் உருவாக்கி சர்க்காரிடம் சமர்ப்பித்தது. ஆனால்; அம்மசோதா எக்காரணத்தாலோ சட்டமாக்கப்படாமலேயே வைக்கப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் எதுவாயினும் சரி; இம்மாகாண நெசவாளர்கள்—அவர்களது தொழில் ஆகியவைகளின் முன்னேற்றங்களைக் கருத்தில் கொண்டு ராஜ்ய சர்க்கார் அதை சட்டமாக்கி அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமாய் இக் கூட்டம் வற்புறுத்துகிறது.

சாயத் தொழில்களுக்கு விற்பனை வரி கூடாது.

கைத்தறித் துணியின் மோஸ்தருக்கு காரணமாக அமைந்துள்ள சாய, அச்சுத் தொழில்களுக்கு விற்பனை வரி விதிப்பதை இக் கூட்டம் ஆட்சேபிக்கிறது. கைநெசவுத் தொழிலையும், கைத்தறி நெசவாளியையும் பாதிக்கும் இவ் வரியை ரத்து செய்ய வேண்டுவதை உணர்த்துவதுடன், கைநெசவுத் தொழிலுக்கு சம்பந்தம்பட்ட (பட்டு, ஜரிகை, சாயத் தொழில்) எதற்கும் எந்தவித வரி விதிப்பும் கூடாது என எடுத்துக் காட்டுகிறது.

கைத்தறி ஜவுளி சில்லறை விற்பனைக்கு விற்பனை வரியை $1\frac{1}{2}$ தம்பிடியாகக் குறைத்ததற்கு சர்க்காரைப் பாராட்டுவதுடன் பூரணமாகவே கைத்தறி ஜவுளிக்கு விற்பனை வரியை ரத்து செய்து விடவேண்டுமென இக் கூட்டம் சர்க்காரைக் கேட்டுக் கொள்ளுகிறது.

கூட்டுறவு சொஸைட்டிகள் ரிஜிஸ்டர் செய்து தருவதில் வீண் தாமதம்

நெசவாளர்கள் தாங்களாகவே முன் வந்து தங்களுக்கு கூட்டுறவு சொஸைட்டிகள் அமைத்துக்

கொடுக்க வேண்டுமென்று கோரும் ஸ்தலங்களில், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூட்டுறவு சொஸைட்டிகள் அமைத்துத் தருவதில் மாதக் கணக்காக—வீணான முறையில் காலம் கடத்தி வருவதை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது. எனவே கூட்டுறவு அதிகாரிகள் காலம் கடத்தும் போக்கை மாற்றிக் கொள்ள வேண்டிய உணர்வைப் பெறும் முறையில் அவர்களுக்கு ரிஜிஸ்ட்டார் அவர்கள் உத்திரவிட வேண்டுமாய் இக்கூட்டம் கோருகிறது,

போராடும் நெசவாளருக்கு ஆதரவு

சென்னை ராஜ்யத்திலுள்ள நெசவாளர்கள் தங்களது தொழிலுக்குப் போதுமான நூல் வேண்டுமெனக் கோரி பல்வேறு இடங்களிலும் போராடிவருவதை இக்கூட்டம் பாராட்டுகிறது; வரவேற்கிறது. சமாதானமான வழிகளில் தங்களின் குறைகளை மக்களறியப் போராடிவரும் நெசவாளர்கள் மீது அடக்குமுறையைப் பிரயோகித்தும், வழக்குகள் தொடுத்தும், தண்டித்தும் அவர்களின் ஜீவாதாரமான பிரச்னைகள் மீது நடந்துவரும் இயக்கத்தை சர்க்கார் நசுக்கிவருவதை இக்கூட்டம் கண்டிக்கிறது. போராடும் நெசவாளர்களின் கோரிக்கைகளைப் பூர்த்தி செய்ய சர்க்கார் சகல வழிகளிலும் முயற்சிக்க வேண்டுமாய் இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

பருத்தி சாகுபடி பெருக.

பஞ்சு வர்த்தகத்தில் இந்த ராஜ்ய பஞ்சாலை முதலாளிகளுக்கு ஏகபோகமான அதிகாரங்கள் வழக்கப்பட்டிருப்பது குறித்துஇக்கூட்டம்தனதுகவலையைத் தெரிவித்துக் கொள்கிறது. காரணம்; பருத்தி சாகுபடியில்—அதாவது உற்பத்தியில் விவசாயிகளை ஊக்குவிக்க அவ்வுத்திரவு சாதகமாக அமையாததுதான். நூல் உற்பத்தி பெருகி, நெசவாளர்களின் கஷ்டம் தீர பருத்தி உற்பத்தி அதிகரிக்க வேண்டுவது மிகவும் அவசியமாகும். எனவே, பருத்தி உற்பத்தியில் விவசாயிகளுக்குஊக்கமேற்பட போனஸ் போன்ற நன்கொடைகள் அளித்து உற்சாகப்படுத்தவும், தஞ்சை, திருச்சி போன்ற நீர்ப்பாசன வசதிகள் உள்ள டெல்டாபிரதேசங்களில் பருத்தி சாகுபடி செய்துபஞ்சு பற்றுக்குறையைப் போக்கவும் சர்க்காரின் தொழில்—விவசாய இலாகாக்கள் கூட்டு முயற்சி செய்ய வேண்டுமெனவும், பஞ்சு வர்த்தகத்தில் இந்த ராஜ்ய விவசாயிகளுக்கும் கணிசமான பங்கு கொடுக்கவேண்டுமெனவும் இக்கூட்டம் கோருகிறது.

இடைத் தட்டு நெம்பர் நூல்கள் வேண்டாம்.

நூல் உற்பத்தியில், வேண்டாத இடைத்தட்டு நெம்பர் நூல்கள் நூற்கப்படுவதை அறவே தடுத்தாகவேண்டும். உதாரணமாக 18, 22, 26, 36, 50 நெ. போன்ற நூல்கள் மில்களில் நூற்கப்படுவதின் ரகசியமே உள்நாட்டு மார்க்கெட்டில் அதன் கிராக்கியை குறைத்து வெளிநாட்டு ஏற்றுமதிக்கு சர்க்காரிடம சலுகைபெற முயற்சிக்கத்தான் என்பது அனுபவ உண்மை. உள்நாட்டு மார்க்கெட்டிற்குத் தேவையான நெ. நூல்களை நூற்க வேண்டுமெனவும், அவைகள் எங்கெந்த வட்டாரங்களுக்கு தேவையோ அங்கு கொண்டு போய் அதை வினியோகிக்கவேண்டுமென்றும் மத்ய சாக்காரின் தொழில் அமைச்சரையும், டெக்ஸ்டைல் கமிஷனரையும் இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

ராஜ்யத்தேவை போக!

இம்மாகாண நூல் தேவை—அதாவது மாதத்தில் ஒரு தறி 20 நாள் வேலை செய்யத்தேவையான என்ற கணக்கின் அடிப்படையில் 39,000 பேல்களாகும். இந்தத் தேவைக்கும் மீறிய அளவு பேல்கள் இந்த ராஜ்யத்திலேயே உற்பத்தியும் ஆகிறது. எனவே மேற்கண்ட 39,000 பேல் நூலை இங்கு வைத்துக்கொண்டு எஞ்சியுள்ள பேல்களையே வெளியே அனுப்பவேண்டுமென ராஜ்ய சர்க்காரை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

சுத்தக்கதர் உற்பத்தியில் ஈடுபட சுதந்திரம் வேண்டும்!

சுத்தக் கதர் நூல் நூற்கவும், நெய்யவும் அகில பாரத சர்க்கா சங்கம், சர்க்காரின் கதர் சுயதேவைப் பூர்த்தி செண்ட்டர்கள் ஆகியவைகளில் இணைந்துள்ளவர்களைத் தவிர பிறயாரும் அத்தொழிலில் ஈடுபடுவதை சட்டபூர்வமாகத் தடுப்பதைக் கண்டு இக்கூட்டம் ஆச்சரியப்படுகிறது. காந்திஜி போற்றிப் பேணி வளர்த்த இந்நாட்டு புராதனமான குடிசைக் கைத்தொழிலை யாரும் நூற்கவோ; அதை நெய்யவோ எவ்விதத் தடையுமிருக்கக் கூடாதென இக்கூட்டம் கருதுகிறது. எனவே அது பற்றிய தடைகள் யாவும் பூரணமாக நீக்கப்படவேண்டுமென ராஜ்ய சர்க்காரைக் கோருகிறது.

நூலைக் கட்டாயக் கொள்முதல் செய்யவும்.

நில விஸ்தீரணத்தை அடிப்படையாகக்கொண்டு உணவு தானியம் கட்டாயக் கொள்முதல் செய்வதைப்போல, சாக்கார் மில்களில் உள்ள நூற்புக் கதிர்களின் எண்ணிக்கையை ஆதாரமாகக் கொண்டு ஒவ்வொரு மில்லும் இவ்வளவு பேல் நூல் மாதாமாதம் உற்பத்திசெய்து தரவேண்டுமென உத்திரவிட்டு, அதைக்காட்டாயக் கொள்முதல்செய்ய வேண்டுமாய் இக்கூட்டம் சர்க்காரை கேட்டுக் கொள்கிறது.

நூல் விலையைக் குறைக்கவும்

நூல் விலையுயர்வு நெசவாளர்களின் கூலியைப் பெரிதும்வெட்டிவிட்டது. எனவே, 1947ம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்டிருந்த

நூல் விலைக்கே இன்றைய நூல் விலைகளைக் குறைத்து, நெசவாளியின், ஜீவனக்கூலியைக் குறைக்காமல் பாதுகாக்க வேண்டுமென இக்கூட்டம் கோருகிறது. இவ்விலைக் குறைப்பால் ஏற்படும் நியாயமான நஷ்டத்தை மில் முதலாளிகளுக்கு சர்க்கார் நஷ்ட ஈடாக செலுத்தலாமென்வும் ஆலோசனை கூறுகிறது.

நிர்ணயித்த கோட்டாவைப் பெற

இந்திய சர்க்கார் சென்னை ராஜ்யத்திற்கு ஒதுக்கியிருக்கும் கோட்டா நூல் பேல்களை மாதா மாதம் சரிவர மில்கள் ராஜ்ய சர்க்காரிடம் கொடுப்பதில்லையென இக்கூட்டம் அறிகிறது. ஆகவே நிர்ணயித்த கோட்டாவை எவ்வித நடவடிக்கையையும்மேற்கொண்டு மில்களிலிருந்து பெற ராஜ்ய சர்க்காருக்கு அதிகாரம் வழங்கவேண்டுமாய் மத்ய சர்க்காரை இக்கூட்டம் கோருகிறது.

கன்சியூமர் நூல்கோட்டா

நூல் பற்றுக்குறை பிரமாதமாக வளர்ந்து விட்ட இன்னும், ராஜ்யத்தில் சிலருக்கு கன்சியூமர் கோட்டா என்ற பெயரில் அதிக நூல் சப்ளைசெய்து வருவதை இக்கூட்டம் வெறுக்கிறது. எனவே, பாரபட்சமின்றி எல்லா நெசவாளர்களுக்கும் கன்சியூமர் கோட்டாதாரரிடம் நெய்யும் தறிகளுக்கு எவ்வளவு நூல் கொடுக்கப்படுகிறதோ அதே அளவு நூல் கொடுக்க வேண்டுமென ராஜ்ய தொழில் அமைச்சரை இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

இறக்குமதியாகும் நூலையும் பங்கீடு செய்யவும்.

இறக்குமதியாகும் சீமை நூலை, இறக்குமதியாளர்களின் இஷ்டப்படி விற்றுக்கொள்ள அனுமதிப்பதால் பணவசதியுள்ள பலர் வாங்கி சேமித்துக்கொள்ள ஏதுவாகிறது. இதனல் ஏழை நெசவாளர்களுக்கு வெளிநாட்டு நூல் சரளமாகக் கிடைப்பதில்லை. எனவே இறக்குமதியாகிற நூலையும் நெசவாளர்களுக்கே நேரடியாகக் கிடைக்க அதையும் பங்கீடு செய்ய வேண்டுமாய்க் கூட்டம் கோருகிறது,

இந்தத் தீர்மானங்களின் மீது பல்வேறு ஊர் பிரதிநிதிகளும் விவாதித்து, இவைகளைக்கிரியாம்சையில்நிறைவேற்றபோர்டுஇடைவிடாது பாடுபடவேண்டுமென வற்புறுத்திப் பேசினர். பின் இடைக்காலநிர்வாகிகளாக போர்டுக்குக் கீழ் கண்டவர்களைத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

தலைவர்:- திரு. எம். பி. நாச்சிமுத்து முதலியார் பி. ஏ. பி. எல். ஈரோடு.

காரியதரிசிகள்:- திருவாளர்கள், சி. கே. முனுசாமி, கோவை, டி. ஏ. குருசாமி முதலியார் துடுப்பதி.

பொக்கிஷதாரர்:- திரு. பெரிய பச்சையண்ண முதலியார் பெருந்துறை.

போர்டு அங்கத்தினர்கள்:— கே. சுப்ரமணியம், அவனுசி பிர்க்கா கைத்தறி நெசவாளர் சங்கம், ப. து. வடிவேல் பிள்ளை, டி. பி. வெங்கடாசலம், தாராபுரம் தாலூக்கா மாஸ்டர் வீவர்கள் & வீவர்கள் சங்கம், என். கருப்புசாமி, திருப்பூர் டையிங் அண்டு பிரிண்டிங் அசோசியேஷன், ஓ. எஸ் நாச்சிமுத்து சென்னிமலை நெசவாளர் சங்கம், செங்கோடன் த. நா. நெ. பெடரேஷன் பவானி தாலூக்கா கிளை, பி. ஏ. ராமசாமி பி. வி. குப்புசாமி கோவை கைத்தறி நெசவுத் தொழிலாளர் சங்கம், எஸ். பி. கருப்பண்ண முதலியார் ஈரோடு நூல்ஆலோசனைக் கமிட்டித் தலைவர், ஆர். திருமூர்த்தி முதலியார் திங்களூர் நெசவாளர் கூட்டுறவு சொஸைட்டி, காந்தி மாரிமுத்து சித்தோடு காங்கிரஸ் நெசவாளர் சங்கம், எம். சோமசுந்தரம் ராய்க்காபாளையம் நெசவாளர் காங்கிரஸ், கே. ஸி. கருப்பண்ணன் ஈரோடு மக்கம் தறி சொந்தக்காரர்கள் சங்கம், எஸ். வரதராஜ் குள்ளக்காபாளையம் நெசவாளர் சொஸைட்டி, பொள்ளாச்சி, கே. என். குட்டி செட்டியார் அவனுசி கூட்டுறவு நெசவாளர்சங்கம், பி. முருகேசன் தெவராயம்பாளையம் கிராம முன்னேற்ற சங்கம், கே. எம். சுப்ரமணியம் ஆய்க்கவுண்டன்பாளையம் நூல் ஆலோசனைக் கமிட்டி. எஸ். ஆர். முத்துச் சாமி சிவகிரி நெசவாளர் கூட்டுறவு சங்கம், எஸ். பி, சுப்புரத்தினம் துடுப்பதி நூல் ஆலோசனைக் கமிட்டி, K. M. பொன்னுசாமி கோவை, எம். கே. சாமி ஆசிரியர் "கைத்தறி" கோவை.

ஸ்ரீவில்லிப்புத்தூர் நெசவாளர்

கூட்டுறவு உற்பத்தி, விற்பனை

சங்கம் லிமிடெட், No. A. 1601.,

ஸ்ரீவில்லிப்புத்தூர்.

பொதுமக்களின் நலனையே குறிக்கோளாகக் கொண்டு உடுக்க மெல்லியதும், கவர்ச்சிகரமான பேட்டு தினுசுகளிலும், வேட்டி, துண்டு ரகங்களும், எல்லா அகலங்களிலும் காடா பீசுகளும் ஏராளமாகத் தயாரிக்கிறோம். கல்கத்தா மார்க்கெட்டுக்கு ஏற்ற 20s & 40s நூலில் 2x9, 2x10 ஜோடி ரகங்கள் கை வசம் உள்ளன. மொத்தத் தேவைக்கு எழுதுங்கள். முன் ஒப்பந்தம் செய்து கொள்ளலாம். தற்சமயம் விலை மிகவும் குறைத்துள்ளோம். தேவைக்கு முந்துங்கள்.

A. K. ஞானியார், செயலாளர். *P.* குருசாமி, தலைவர்.

சென்னையில் கடந்த இரண்டரை மாதங்களாக நடந்துவந்த நெசவாளர்களின் போராட்டம் மத்திய சர்க்காரின் தொழிலமைச்சர் ஸ்ரீ மஹதாப் அவர்களின் தலையீட்டினாலும், அவர் போராட்டக் கமிட்டியினருக்கு அளித்துள்ள வாக்குறுதியாலும் தாற்காலிகமாக நிறுத்தப்பட்டிருக்கிறது என பத்திரிகைச் செய்திகள் அறிவிக்கின்றன.

போராட்டத்திற்கான காரணங்களும், அதன்மீது உருப்பெற்ற தீர்க்கமான கோரிக்கைகளும் பிரசித்தமானவைகளாகும். கட்சி, அரசியல் பேதமின்றி நம் ராஜ்ய சர்க்கார் உள்பட அனைவரும் விரும்பியது ராஜ்யத்தில் உற்பத்தியாகும் நூலில், முதலில் இந்த ராஜ்யத் தேவை போக மீதியுள்ளதைத்தான் வெளி ராஜ்யங்களின் உபயோகத்திற்கு எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கோரிய கோரிக்கையை நிறைவேற்றுவதாக ஸ்ரீ மஹதாப் வாய்மொழியாக ஒப்புக்கொண்டு வாக்குறுதியளித்துள்ளதுதான் போராட்டம் தற்காலிக நிறுத்தத்திற்குக் காரணம் என வெளிவந்த செய்திகளிலிருந்து தெரிய வருகிறது.

ஜவுளி உற்பத்தியில் ஈடுபட்டுள்ள நெசவு மில்கள், கைத்தறிகள் ஆகியவைகளுக்கு விகிதாசார அடிப்படையில் கணக்கிட்டு நூல் வழங்குவதாகவும் அவர் கூறியிருக்கிறார். அதற்கான மகாநாடொன்றும் விரைவில் சென்னையில் நடைபெறப்போவதாக வேறு தெரிகிறது. விகிதாசார நூல் வினியோகத்திற்கு அடிப்படையாக எடுத்துக்கொள்ளப்போகும் கணக்குகள் எது என்பது மட்டும் மஹதாப் அவர்களாலோ, போராட்டக் கமிட்டியாராலோ விளக்கப்படாத புதிராகவே இருந்து வருகிறது. எனவே, வாக்குறுதி கிரியாம்சையில் நிறைவேற ஆரம்பிக்கும் போதுதான், அல்லது அதுபற்றிய வினியோகக் கொள்கை வரையறை செய்து அறிவிக்கப்பட்டபின்தான் அதுபற்றி நாம் நமது கருத்தை வெளியிட முடியும்.

அதேகாலத்தில் ஸ்ரீ மஹதாபின் வாக்குறுதியில் நம்பிக்கை வைக்காமல் இந்த ராஜ்யப் பத்திரிகைகள் அநேகமாக எல்லாமே

வேண்டும்; ராஜ்ய நெசவாளர்களின் ஜீவாதாரமான கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்றால் மஹதாபின் வாக்குறுதிகள் நிச்சயமாக நிறைவேற்றப் பட்டாகவேண்டும்.

அது நிறைவேறுமா, இல்லையா என்பது பற்றிய முடிவுக்கு நாம் வர அவரின் பெங்களூர் பிரசங்கமே நமக்கு உதவிசெய்கிறது.

★ முடிந்து விட்ட

தங்களின் சந்தேகத்தை வெளியிட்டுள்ளன என்பதை இங்கு நாம் வாசகர்களின் கவனத்திற்குக் கொண்டுவராமல் இருக்க முடியாது.

காரணம்; மஹதாப் தனது வாக்குறுதியை எந்த அளவிற்கு நிறைவேற்ற அவரால் முடியும்—முடிந்தது என்பதை அனுபவத்தில் அறிந்தேதான் பத்திரிகைகள் சந்தேகத்துடன் அவரது முடிவை வரவேற்றுள்ளன. தவிர, நெசவாளரின் போராட்ட செயல் கமிட்டியாரும்கூட மஹதாபின் வாக்குறுதில் பூரணமாக நம்பிக்கை கொள்ளாததாலேயே, போராட்டத்தைத் தாற்காலிகமாக நிறுத்துவதாகவும், உறுதிமொழிப்படி அவர் நடக்கவில்லையெனில் மீண்டும் ஆகஸ்ட் மாதம் முதல் போராட்டத்தை துவக்க வேண்டியேற்படுமென்றும் முன்கூட்டியே தங்களின் எண்ணத்தை முடிவாக அறிவித்துள்ளனர்.

பரஸ்பரம் சந்தேகமும், நல்லெண்ணம் இல்லாமையுமே அடிப்படையாகக் கொண்டு போராட்டம் நிறுத்தப்பட்டிருக்கிறது என சம்பவங்களின் தொடர்புகளே சான்று கூறுகின்றன. இந்த சந்தேகம் தவிர்க்கப்பட

அதாவது; “இன்னும் மூன்று மாதங்களில் கைத்தறி ஜவுளிக்கு மார்க்கெட் தேடவேண்டிய கஷ்டமான நிலைமை நமக்கேற்பட்டுவிடும்” என்பதே அது. இந்த வார்த்தைகளுக்கு நேரடியான அர்த்தம் என்ன?

விசைத்தறிகளுக்கும், கைத்தறிகளுக்கும் விகிதாசாரப்படி நூல் கொடுத்தாலும் இந்நிலையில்பிரயோஜனமில்லை·ஏனெனில் அவைகளின் உற்பத்தியை விற்க மார்க்கெட் கிடையாது என்பதுதான் அவர் கூறியுள்ள வார்த்தைகளுக்கு நேரிடையான அர்த்தம். இடைக்கால சாந்தியாக “ஏதோ” செய்யவேண்டுமென்ற அவரின் நல்லெண்ணம் நிரந்தரமான நற்பயனையளிக்குமா எனில்; இல்லையென்றே அவரது பேச்சைக் கொண்டு முடிவுக்கு வரவேண்டியிருக்கிறது.

கைத்தறி ஜவுளிக்கு மார்க்கெட் இல்லையென்று கூறுவதை நம்மால் ஒப்புக்கொள்ளமுடியாது. ஏனெனில் மக்களின் அபிலாஷைக் கேற்ற — நாகரீகத்திற்கேற்ற ரகங்கள் மில்களை விட கைத்தறிகளில்தான் அதிகம் தயாரிக்கப்படுகிறது. அவைகளுக்கு கிழக்காசிய நாடுகளிலும், தென்னாப்பிரிக்கா போன்ற நாடு

சென்னைப்போர் ★

களிலும் நிரந்தரமான நல்லதொரு மார்க்கெட் என்றும் இருந்தேதான் வந்திருக்கிறது. இன்று மட்டும் திடீரென்று அம் மார்க்கெட்டுகளை கைத்தறி ஜவுளிகள் இழந்துவிட உலகநாடுகளில் மற்றவை ஏதேனும்ஒன்று அங்கு வந்து கைத்தறி ரகங்களோடு போட்டி போட்டு விட்டதா .எனில் இல்லையென்று ஜவுளிக்கு மார்க்கெட் இல்லையென்று கூறுகிறார். வேடிக்கையாக இருக்கிறது இவர் பேச்சு.

வறுமையில் உழலும் கைத்தறிக்காரனையும், வலிமை மிக்க இந்திய மில் முதலாளியையும் கிழக்காசிய நாட்டு மார்க்கெட்டில் "குஸ்தி" க்கு விட்டு, அதில் கைத்தறிக்காரன் அடைந்துவிட்ட தோல்வியைத்தான் ஆதாரபூர்வமாக நம்மால் சொல்ல முடியும்.

இந்நாட்டின் தொன்மை மிக்க குடிசைத் தொழிலான கைத்தறி நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஒரு கோடி மக்களைப் பட்டினி போட்டுவிட்டு, அவர்களது தொழிலுக்குப் போதுமான நூல் கொடுக்காமல் அவர்களை வேலையில்லாத திண்டாட்டத்திற்குப் பலி கொடுத்துவிட்டு, நூல் உற்பத்தியில் ஈடுபட்டிருந்த மில்களில் புதிய இயந்திரத்தறிகளை மாட்டிக்கொள்ள அனுமதியளித்தும் உற்பத்தியாகும் நூலில் 93 சதவீதத்தை அவைகள் நெசவுப் பிரிவுக்கு என்றுமில்லாத முறையில் எடுத்துக்கொள்ள சம்மதித்தும் — இந்நாட்டு மக்கள் துணிக்குத் திண்டாடிக்கொண்டிருக்கும்போதே —-துணி உற்பத்தியில் வாயுவேகமாக ஈடுபட்டிருந்த நெசவாலைகளை கிழக்காசிய நாடுகளுக்கு துணி ஏற்றுமதி செய்ய அனுமதித்து- அங்கு மேற்கொண்டு இறக்குமதிசெய்து கொள்ள ஆள் கிடைக்காத அளவு வரை துணி தேங்கிவிட்ட பிறகுதான் — பரிபூர்ணமாக கைத்தறி ஜவுளி மார்க்கெட்டை இந்திய மில் முதலாளிகள் தங்களின் சக்தியனுசாரம் வரை ஆக்ரமித்துக் கொண்ட பிற்பாடுதான் ஸ்ரீ மஹதாப் அவர்கள் கைத்தறி ஸ்ரீ மஹதாப் கைத்தறி ஜவுளிக்கு மார்க்கெட் இல்லையென்ற வார்த்தைகள் மூலம் அறிவிக்கிறார். இவருடைய துணி ஏற்றுமதிக்கொள்கைதான் இவ்வளவுக்கும் காரணம் என்பதை மட்டும் இவர் எப்படி ஒப்புக்கொள்ளுவார்? பாவம்!

இன்று அவரது தலையிட்டால் புதிய எவ்வித நன்மையையும் ராஜ்ய நெசவாளர்கள் அடைந்துவிடவில்லை. அதற்குப் பதில் புதிய நெருக்கடியின் அறிவிப்பைத்தான் ஸ்ரீ மஹதாபின் விஜயத்தால் நாம் அறிந்துகொண்டிருக்கிறோம்.

இவரைக் காட்டிலும் சென்னை ராஜ்ய சர்க்கார் முடிந்தளவு எத்தனையோ மடங்கு, ராஜ்ய நெசவாளர்களின் கோரிக்கைகளைப் பூர்த்தி செய்வதில் அனுதாபம் காட்டித்தான் வந்திருக்கிறார்கள். யார் அனுதாபப்பட்டும் கைத்தறிக்காரனின் பாடுமட்டும் இன்னும் விடிந்தபாடில்லை. இதற்குக் காரணமும் இல்லாமலில்லை.

நாட்டின் நூல் உற்பத்திக் கொள்கை, ஜவுளி ஏற்றுமதிக் கொள்கை, இவைகளை உள்நாட்டில் வினியோகிக்கும் கொள்கை போன்றவைகளை நிர்ணயிக்கும் விஷயத்தில் கைத்தறி நெசவாளிக்கும் பங்கு என்று கிடைக்கிறதோ — அவனுடைய சுயநலமற்ற யோசனையை சர்க்கார் எப்போது ஏற்றுக்கொள்ளுகின்றனரோ அன்றுதான் அவனது தொழிலிலும், வாழ்விலும் மறுமலர்ச்சி ஏற்பட முடியும். அதல்லாத வேறு எந்த ஏற்பாடும் அவனுக்கு ஏற்றதாகவோ, நாட்டிற்கு நன்மை பயப்பதாகவோ அமையாது என்று எடுத்துக் காட்ட நாம் விரும்புகிறோம்.

. எனவே, இந்த ராஜ்யப் பத்திரிகைகள் தங்களது சந்தேகத்தை அடித்துக் கூற ஆதாரமில்லாததாலேயே மழுப்பலாக மஹதாப் மீது சந்தேகப் போர் தொடுத்துள்ளன. அவர்களது சந்தேகம் சரியானதுதான் என்பதற்கே நாம் மேற்கண்ட ஆதாரங்களை இங்கு விவரித்தோம்.

பொதுவாக நெசவாளர்கள் தொடர்ந்து போராடிக்கொண்டேதான் இருக்க வேண்டுமென்று நாம் கூற முன்வரத் தயாராக இல்லை. போராட்டம் நிறுத்தப்பட்டதற்கான காரணங்களைப் பார்க்கும்போதுதான் நகைப்பிற்கிடமாயிருக்கிறது. சென்னையில் கூடப்போகும் மத்ய, மாகாண டெக்ஸ்டைல் அதிகாரிகளின் மகாநாடு என்ன முடிவு கூறப் போகிறதோ பொறுத்திருந்து பார்ப்போம்.

இவர்கள் கூடும்போது ராஜ்ய கைத்தறிச் கமிட்டியின் சிபார்சுகளை அடிப்படையாகக் கொண்டு இந்த மாகாண நெசவாளர்களின் பிரச்னைகளை அணுகி முடிவுக்கு வருவதுதான், சென்னைப் போராட்டம் மீண்டும் வெடிக்காமலிருக்க உதவி செய்யும் என நம்புகிறோம்.

தேங்கிவிட்ட கைத்தறி ஜவுளியை விற்பனை செய்ய "கைத்தறி"யில் விளம்பரம் செய்யுங்கள்.

இயன்றதை

இல்லை என்னாது கொடுங்கள்!

87 சதவிகித மக்கள் விவசாயிகளாக இருக்கும் இந்தியா, உணவு பற்றாக்குறையால் ஒரு கடுமையான பஞ்சத்தை எதிர்நோக்கிக் கலங்கிக்கொண்டிருந்த நிலைமை சிறிது சீர்திருந்தியுள்ளது. வெளிநாடுகளிலிருந்து ஏகமாக இறக்குமதி செய்தாவது அந்தப் பஞ்சம் தவிர்க்கப்பட்டுவிடக்கூடும் என்ற நல்ல நம்பிக்கை இப்போது ஏற்பட்டிருக்கிறது.

ஆனால் இந்த நம்பிக்கையால் கிடைக்கின்ற சிறிதளவு ஆறுதலைக்கூட சிதறடித்துவிடுகின்றது சென்னை ராஜ்யத்தின் சில ஜில்லாக்களிலே வேறொரு காரணத்தால் ஏற்பட்டுள்ள மற்றொரு பஞ்சம். இந்தப் பஞ்சம் பல ஆயிரக்கணக்கான மக்களின் உயிருக்கு உலை வைத்துவிடக்கூடிய அளவுக்குப் பயங்கரமாக வியாபித்து வருகிறது என்று கூறுவது மிகையல்ல.

நெருக்கடியான பஞ்ச நிலைமைகள் பயமுறுத்திக்கொண்டிருந்தபோது சென்னை அரசாங்கம் கிராமப்புற ரேஷனை ரத்து செய்தது. சிலநாட்கள்வரை உணவுப் பொருள்கள் கிடைக்காது கிராம மக்கள் அவதிப்பட்டனர். பதுக்கலும் கள்ளமார்க்கெட்டும் அவர்களை வாட்டிப்பிழிந்தன. பலத்த கண்டனங்களுக்குப்பிறகு ஓரளவு நியாய விலைக் கடைகள் கிராமப் புறங்களில் திறக்கப்பட்டன. அக் கடைகளிலிருந்து 12 அவுன்ஸ் ரேஷன் தானியமாக மக்கள் இன்று பெறுகின்றனர்.

சென்னை ராஜ்யத்தின் பல ஜில்லாக்களில் கடந்த சிறிது காலமாக கிடைக்கும் சிறிய அளவு தானியத்தைக்கூட வாங்கிப் புசிக்க வகையில்லாமல் மக்கள் பட்டினி கிடந்து மடிய வேண்டிய பஞ்ச நிலைமை அந்த ஜில்லாக்களில் தலை எடுத்திருக்கிறது.

கடந்த சில வருஷங்களாகப் பருவ மழை தவறிவிட்டதாலும், மழையில்லாதபோது பயிரிடுவதற்கான சரியான நீர்ப்பாசன வசதி இல்லாததாலும், விவசாயம் ஒன்றையே ஜீவனத்தொழிலாகக் கொண்ட கிராம ஏழைகள் கொடிய வேலையில்லாத் திண்டாட்டத்தின் பிடிக்குள் பலமாகச் சிக்கித் தவிக்கிறார்கள்.

விவசாயத் தொழிலாளர்களாகவே இருக்க வேண்டிய நிலையிலுள்ள ஹரிஜன மக்களும் இதர விவசாயத் தொழிலாளர்களும் பயங்கரமான பஞ்ச அபாயத்திற்குள்ளாகி இருக்கின்றனர். சாதாரண சிறு சிறு நிலத்தையுடைய ஏழை விவசாயிகளும் பல மத்தியதர விவசாயிகளும் கூட தங்களிடமிருந்த உழவுக் கருவிகளையும், மாடுகளையும், கடைசியாக நிலத்தையும் விற்றுவிட்டு விவசாயத் தொழிலாளிகளுடைய நிலைமைக்கு வந்துவிட்டனர். இவர்கள் எல்லோரும் இன்றைக்கு கையில் காசில்லாத காரணம் ஒன்றினாலேயே பட்டினி கிடந்து மடியவேண்டிய பரிதாபகரமான நிலைமையிலிருக்கின்றனர். இந்த நிலைமை, ராமநாதபுரம், வடஆற்காடு, கோவை முதலிய ஜில்லாக்களில் கொடுமையாக இருக்கிது.

ஆர். எம். கண்ணபிரான்,
கோயமுத்தூர்.

சில மாதங்களுக்கு முன்பு கோவை ஜில்லாவைச் சேர்ந்த பல பிரமுகர்கள் இந்தப் பயங்கரத்தைத்தவிர்க்க முன்வந்தனர். பஞ்ச நிவாரணக் கமிட்டி ஒன்று நிறுவப்பட்டது. கோவை ஜில்லாவில் பஞ்சம் கடுமையாக இருக்கும் 22 இடங்களில் இன்று கஞ்சித் தொட்டிகள் ஏற்படுத்தி நடத்தி வருகின்றனர். தினந்தோறும் அந்தக் கஞ்சித்தொட்டிகளிலிருந்து பல ஆயிரக்கணக்கான ஏழைமக்கள் கஞ்சிபெற்று உடலிலிருந்து உயிர் பிரிந்துவிடாது காத்து வருகின்றனர்.

பஞ்ச நிலைமைகளிலிருந்து நிரந்தரமான பாதுகாப்பை இந்தக் கஞ்சித்தொட்டி நிவாரணம் அளித்துவிடாது என்றாலும்கூட பட்டினிச் சாவின் பயங்கரப் பிடியிலிருந்து மக்களை அதனால் நிச்சயம் பாதுகாக்கமுடியும். மக்களைப் பட்டினியிலிருந்து பாதுகாக்கவேண்டிய பொறுப்புக்குப் பாத்திரமாக இருக்கும் சர்க்கார் போதிய கவனம் காட்டாமலிருந்தபோது தாமாக முன்வந்து பஞ்ச நிவாரணத்திற்கான மெச்சத்தக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொண்ட பஞ்சநிவாரணக் கமிட்டியினர் பாராட்டப்பட வேண்டியவர்களே. இப்போது இந்தப் பஞ்ச நிவாரணக் கமிட்டிக்குச் சர்க்காரிடமிருந்து சிறிதளவு உதவி கிடைத்திருக்கிறது. தேசீய நிவாரண நிதியிலிருந்து பத்தாயிரம் ரூபாயை சென்னை சர்க்கார் கோவை ஜில்லாவிற்கு ஒதுக்கிவிட்டிருக்கிறது. இந்தியப் பிரதமர் பண்டித நேருவும் இந்தப்பஞ்ச நிவாரண வேலைகளுக்கு உதவியளித்துள்ளார். கோவை ஜில்லா போர்டும், இதர நகரசபைகளில் சிலவும் ஆயிரக்கணக்கில் நிதி உதவியிருக்கிறது.

கோவையைப் போலவே வேலூரிலும் பஞ்ச நிவாரணக் கமிட்டிகள் அமைக்கப்படவேண்

டும் என்று சமீபத்தில் வட ஆற்காடு ஜில்லா கலெக்டர் அறிவித்திருக்கிறார். மேலும் பல இடங்களிலும் பஞ்ச நிவாரணம் அவசரமாக தேவைப்படுகிறது. எனவே சென்னை ராஜ்யத்தில் பஞ்ச நிவாரண வேலை மிகப் பெரிய அளவில் செய்யப்பட வேண்டிய வேலையாக ஆகிவிட்டது.

ஓரிரு வருடங்கள் பருவமழை தவறியவுடனே சர்க்கார் நீர்ப்பாசன வசதிகளின்மீது கவனம் செலுத்தியிருக்க வேண்டும். பெரிய பெரிய நீர்ப்பாசன வசதிகளுக்கான பவானிசாகர் அணைக்கட்டுகளோடு சிறிய அளவு நீர்ப்பாசன வசதிகள் ஏற்பட வழிவகை கண்டிருக்க வேண்டும். கிணறு வெட்ட விவசாயிகளுக்கு வடன் மானியம் அளிக்கும் திட்டமொன்றை சர்க்கார் அமுலுக்குக் கொண்டுவந்தது. ஆனால் அந்தத் திட்டம் சரியான கணிப்புடன் தயாரிக்கப்படாதிருந்த காரணத்தால் அது பூரணமான வெற்றியளிக்கவில்லை. முதலாவதாக அந்தத் திட்டத்தின் கீழ் அளிக்கப்பட்ட மானியத் தொகை போதுமானதாக இல்லை. இரண்டாவதாக அந்தத்தொகையைப் பெறுவதற்குள் ஒவ்வொரு விவசாயியும் அதிகாரிகளின் கெடுபிடிகளால் அடைந்த அவதிகள் அனந்தமாக இருந்தது. இப்படியாக சிறு அளவு நீர்ப்பாசன வசதியைச் செய்துகொடுப்பதில் கூட சர்க்கார் தவறிவிட்டது.

நல்ல நாளிலேயே இந்திய விவசாயியின் வருமானமும், அவனை நம்பி வாழுகின்ற இதர கிராமப்புற ஏழைகளின் வருமானமும் மிக மிகக் குறைவானது.

தொழிலே நடக்க முடியாது போய்விட்ட பிறகு கிராம விவசாயிகளும் ஏழைகளும் சுத்தமாக வருமானமின்றி வாடவேண்டியேற்பட்டுவிட்டது. இதை சர்க்கார் ஏற்கெனவே உணர்ந்திருக்க வேண்டும். உணர்ந்து அந்த நிலைமை ஏற்படாது தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளையும் எடுத்திருக்கவேண்டும். அதைச் செய்யாததோடு பஞ்ச நிலை தோன்றிவிட்ட பிறகும், தாராபுரம் போன்ற பஞ்சப் பிரதேசங்களிலிருந்து மக்கள் நிவாரணம் கோரி கிளர்ச்சி செய்தபோதும் சர்க்கார் நிலவரி வஜா செய்து கொடுத்ததோடு நின்றுவிட்டது. அதன் விளைவாக இப்போது தனிப்பட்டோர் கஞ்சித்தொட்டிகளின் மூலம் மக்கள் உயிர் வாழும் நிலைக்கு வந்துவிட்டனர். இனியாவது சர்க்கார் கண் விழித்து சரியான பரிகாரத்திற்கு முனைய வேண்டும்.

சரியான பஞ்ச நிவாரணம் இரண்டு அம்சங்களைக் கொண்டது. முதலாவதாக பஞ்சம் தோன்றிவிட்ட பிரதேசங்களில் மக்கள் பட்டினியால் மடியாதபடி பார்த்துக்கொள்ளுவது. இரண்டாவதாக அத்தகைய பகுதிகளிலும், பஞ்சம் ஏற்படக்கூடியதெனத் தோன்றுகின்ற இதரப் பகுதிகளிலும் பஞ்ச நிலையிலிருந்து விடுபட மக்களுக்கு வசதி செய்து தருவது.

பிரம்மாண்டமான இப் பஞ்ச நிவாரண வேலையைத் தனிப்பட்டவர்களின் கஞ்சித் தொட்டிகள் மட்டும் செய்து முடித்துவிட முடியாது. "கஞ்சிதான் கொடுக்கப்பட்டு மக்கள் சாகாமல் பிழைத்துக்கொண்டிருக்கிறார்களே" என்ற எண்ணத்தில் ஏதோ சில கஞ்சித்தொட்டிகளுக்கு சிறிதளவு பணம் ஒதுக்கிவிட்டால் போகிறது என்று சர்க்கார் எண்ணி இருந்துவிடவும் கூடாது.

குறைந்த பட்சமாக, பஞ்ச நிலைமைகள் தோன்றியுள்ள பிரதேசங்கள் எவை எவையோ அவைகளைப் பஞ்சப் பிரதேசங்கள் என்று பிரகடனப்படுத்திவிடவேண்டும். அங்குள்ள **வசதி குறைந்த ஏழை மக்களுக்கு ஒரு குறிப்பிட்ட அளவு ரேஷனையாவது இலவசமாகக் கொடுத்துவர வேண்டும்.** அதன் மூலம்தான் இந்த ஜில்லாக்களின் விவசாயிகளின் உழைப்புச் சக்தி பாதுகாக்கப்பட்டு நாளை விவசாய வேலை துவங்கும்போது அவர்களால் நல்ல முறையில் விவசாயத்தில் ஈடுபட முடியும். கஞ்சித் தொட்டிகளிலிருந்து கால் வயிற்றுக்குமட்டும் கஞ்சி குடித்துவருவதால் கிராம ஏழைகள் உடனடியாகச் செத்துப்போவதிலிருந்து பாதுகாக்கப்படுவார்க

(14-ம் பக்கம் பார்க்க)

அவினாசி கைத்தறி நெசவாளர்
கூட்டுறவு உற்பத்தி, விற்பனை
சங்கம் லிமிடெட் நெ. K. 1229.
அவினாசி, P. O.

கைத்தறித் துணி உற்பத்தியில் யாரும் குறை சொல்ல முடியாத முறையில் நாங்கள், எங்கள் சொஸைட்டியில் 20, 26, 40, 60, 80 நெம்பர் நூல்களில் கெட்டிச் சாயச் சேலைகள், வேஷ்டி, துண்டு, கலர் ஷர்ட்டிங் பீசுகள், காடா பீசுகள் உயர்வான மோஸ்தரில், உறுதியான நெசவில் தயார் செய்வதால் தான் மார்க்கெட்டில் மக்கள் எங்கள் சொஸைட்டி ரகங்களையே விரும்பி வாங்குகின்றனர்.

நீங்களும் உங்கள் தேவைக்கு ஒருமுறை ஆர்டர் செய்து பாருங்கள்.

T. K. ஷண்முக முதலியார், காரியதரிசி.
V. சோக்க முதலியார், தலைவர்.

கைத்தறி

வேட்டி புடவைகள்நெய்திடுவான் — அவன்
வீட்டிலே பார்த்தால்துணிப் பஞ்சம்;

—திருமூர்த்தி

★ **கோவை 15—7—51.** ★

சேலத்தில் நூல் தேக்கம்!

"**சேலம்** குகையைச் சேர்ந்த மாரிசெட்டி என்ற நெசவாளி, பல மாதங்களாக தொழிலுக்குப் போதுமான நூல் கிடைக்காததால் பல நாட்கள் பட்டினி கிடந்து கடைசியாகப் பட்டினிச் சாவுக்குப் பலியானான்"

"செவ்வாய்ப் பேட்டையில் உள்ள நெசவாளி குடும்பத்தைச் சேர்ந்த பெண்........பட்டினிச் சாவுக்கு இறையானாள்" என்ற இதுபோன்ற செய்திகளை நாம் ஏற்கனவே நமது 'கைத்தறி'யில் புகைப் படங்களோடு பிரசுரித்துள்ளோம்.

"ஐயாயிரம் பேருக்கு அதிகமான தாய்மார்கள்—குழந்தைகள் உள்ளிட்ட பட்டினி ஊர்வலம்; தொழிலுக்குப் போதுமான நூல் கொடு! பஞ்சப்படி கொடு! நூல் ஏற்றுமதியைத் தடைசெய்! என்கின்றகோஷங்களோடுசெவ்வாய்ப்பேட்டையிலிருந்து........தலைமையில் புறப்பட்டது" என்ற செய்தியையும் 'கைத்தறி' பிரசுரித்துள்ளது.

நாட்டிலுள்ள இதர எல்லாப் பத்திரிக்கைகளுமே மேற்கண்ட செய்திகளை பிரசுரம் செய்தன. நெசவாளர்களுக்கு ஆதரவாக, சர்க்காரின் நூல் ஏற்றுமதிக் கொள்கையைப் பலர் பல மேடைகள்மீது நின்று தாக்கிப் பேசினர்.

பட்டினியைப் போக்க வேண்டுமென்பதற்காக—சாவுகளைத் தடுக்க வேண்டுமென்பதற்காக—பல நூற்றுக் கணக்கான பேர் சர்க்காரின் தடை உத்திரவுகளை மீறி சிறைபுகவும் செய்தனர். அந்தப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து ராஜ்யத்தின் பல்வேறு பகுதிகளிலும் கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், ஹர்த்தால்கள், அநுதாபப் போராட்டங்கள் எல்லாமே, எல்லா கட்சியாரின் ஆதரவுடனேயேநடைபெற்றன. இது அத்தனையும் நியாயமான காரணங்களின்மீதேதான் நிகழ்ந்தன. இன்று அப்படிப்பட்ட ஊரில் நூல் தேக்கம் என்று சொன்னால் ஆச்சரியமாக இல்லையா?

ராஜ்யத்தின் பல்வேறு ஜில்லாக்களிலும் இன்று நூல் நெருக்கடிப் பிரச்னையானது நெசவாளர்களின் மென்னியைப் பிடித்து ஆட்டிக்கொண்டுதானிருக்கிறது. இந்நிலையில் சேலத்திலிருந்து நமக்கு வந்துள்ள செய்தி அதிர்ச்சியை உண்டாக்குகிறது. "*60 நெ. நூல் கண்ட்ரோல் விலைக்கு எவ்வளவு வேண்டுமானாலும் கிடைக்கிறது. 50 நெ. நூல் கண்ட்ரோல் விலைக்கும் குறைந்த (கூப்பனுக்கல்ல; கள்ள மார்க்கெட்டில்) விலைக்கு கிடைக்கிறது. ஆனால் 50 நெ. நூல் வாங்க வாரற்று சீரழிகிறது*" என்று நமக்கு ஒரு நண்பர் கடிதம் எழுதுகிறார்.

"வியாபாரிகள் கேட்கும்வரை 60. நெ. நூல் மேற்கொண்டு அலாட்மெண்ட் போடக்கூடாது", "தறிகாரர்களுக்கு அலாட்மெண்ட் போட்ட தேதியிலிருந்து 7 நாட்களுக்குள் அவர்கள் தங்கள் நூலைப் பெற்றுக்கொள்ளவில்லையெனில், நூல் லைசென்சுதாரர்கள் தங்கள் யுக்தானுசாரம்போல் விலைக்கட்டுப்பாட்டிற்குட்பட்டு அளவு கட்டுப்பாடு எதுவுமின்றி ராஜ்யத்திற்குள் எங்கு வேண்டுமானாலும் விற்றுக்கொள்ள அனுமதி தரவேண்டும்"

என்று சேலம் நூல் வியாபாரிகள் சங்க நிர்வாகக் கமிட்டிக் கூட்டத்தில் கலெக்டரைக் கேட்டுக்கொண்டு தீர்மானமொன்று நிறைவேற்றப் பட்டிருக்கிறது!

வியாபாரிகள் கேட்கும்வரை 60 நெ. நூலை மேற்கொண்டு அலாட்மெண்ட் போடக்கூடாது என்று சொல்லுமளவிற்கு இன்று சேலத்தில் 60 நெ. நூல் தேவையற்ற பொருளாக நெசவாளர்கள் மத்தியில் ஆய்விட்டது.

ராஜ்யத்தின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள 60 நெ. நூல் நெய்யும் கைத்தறி நெசவாளர்கள் தங்கள் தொழிலுக்குத் தேவையான அளவு நூல் கிடைக்கவில்லையே என்று ஏங்கித் தவிக்கும்போது "வேண்டாம்" என்கிற அளவுக்கு சேலத்தில் கொண்டுபோய் 60 நெ. நூல் பேல்கள் திணிக்கப்படுகின்றன.

இந்தச் செய்திகளைவைத்துக்கொண்டே சேலம் நெசவாளர்களுக்கு எக்கச்சக்கமாக நூல் கொடுப்பதாகவும், இப்போது அவர்கள் வாங்க முடியாது திண்டாடுகிறார்கள் என்பதாகவும், சர்க்கார் அறவே நூல் நெருக்கடியை சமாளித்துவிட்டது போலவுமான ஓர் எண்ணத்தை மக்கள் மனதில் தோன்

றும்படியாக செய்ய முயற்சிக்கப்படுகிறது. ஆனால் உண்மை நிலை இதுவல்ல.

ஒரு பக்கம் பல மாதங்களாகவே தொழில் இல்லாதிருந்ததின் விளைவாக கையில் வைத்திருந்த கொஞ்ச நஞ்ச தறிக் கொள்முதலையும் பூரணமாக விற்றுத் தின்றுவிட்ட நெசவாளியிடம் நூல் வாங்கி நெசவு செய்யப் பணமில்லை. மறுபக்கம் இருப்பதைக் கொண்டு நூல் வாங்கி நெய்தாலும் துணி கட்டுபடியான விலைக்கு மார்க்கெட்டில் விலை போவதில்லை. இந்த இரண்டு பிரதான காரணங்களே தான் 60 நெ. நூல். விற்க முடியாத அளவு தேக்க மேற்பட்டுவிட்டதற்குக் காரணங்களாகும்.

அதே காலத்தில் இதர எந்த நெம்பர் நூலாவது சேலத்தில் வாங்கு வாரற்றுக் கிடக்கிறதா எனில் இல்லை. தேங்கிவிட்ட குறிப்பிட்ட 60 நெ. நூல்கூட உயர்ந்தபட்ச விலைக்கு நிர்ணயிக்கப்பட்ட பேல்களாகும். அடுத்த 10 நாளில் ஜூலை மாத டெக்ஸ் உள்ள, விலை குறைவான 60 நெ. நூல் கிடைக்க இருக்கும்போது அதிக பட்ச விலை நிர்ணயித்துள்ள நூலை நெசவாளி இயற்கையாகவே வாங்க மறுப்பது சகஜம். ஆகவே சேலத்தில் நூல் வாங்கமுடியாத அளவுகொண்டு போய் தள்ளிவிட்டதாக யார் நினைப்பினும் அது தவறுதான் என்பதை நேயர்களுக்குத் தெளிவுப் படுத்துகிறோம்.

சர்க்காரின் நூல் வினியோகத் திட்டம் எப்போதுமே இப்படிப்பட்ட குளறுபடிகளைச் செய்து கொண்டுதானிருக்கும். எந்த இடத்திற்கு எந்த நெம்பர் நூல் எந்த அளவு தேவை என்பது பற்றிய புள்ளி விவரத்தைத் தன் கையில் வைத்துக் கொண்டேதான் இப்படிப்பட்ட திருவிளையாடலை சர்க்காரின் சிவப்பு நாடா செய்கிறது. இதுபோன்ற தவறுகளை ஆயிரமாயிரம் தடவைகளில் கடந்த 10 ஆண்டுகளாக எடுத்துச் சொல்லப்பட்டும் சம்பந்தப்பட்ட இலாகா திருந்தியதேயில்லை.

இன்று சேலத்தில் ஏற்பட்டுள்ள 60 நெ. நூல் தேக்கத்திற்கு முழுக்க முழுக்க டெக்ஸ்டைல் இலாகாதான் பொறுப்பாகும். இந்த நிலைமையை வெகு சாதுர்யமாக சேலம் நூல் வியாபாரிகள் பயன்படுத்திக்கொள்ள எண்ணியே, விற்காத நூலை சர்க்கார் திருப்பி எடுத்துக்கொண்டு அந்த நெ. நூல் எங்கு தேவையோ அங்கு கொண்டுபோய் வினியோகித்துக் கொள்ளட்டும் என்று கூறத் துணியாமல், தேங்கிவிடும் நூலை ராஜ்யத்திற்குள் எங்கு வேண்டுமானாலும் கொண்டுபோய் விற்கத் தங்களுக்கு வசதிசெய்து கொடுத்தால்தான் தாங்கள் மேற்கொண்டு நூலை அலாட்மெண்ட் எடுப்போம் என்று கூறியிருக்கிறார்கள்.

"கைத்தறி"
அச்சக நிதி வசூல்.

முன் வசூல் ரூ. 740—4—0

வெள்ளரிவெளி

திரு.	கா. முத்துசாமி முதலியார்	10—0—0
,,	கா. காளியப்ப முதலியார்	10—0—0
,,	V. N. முனிபமுத்து முதலியார்	10—0—0
,,	S. மொசுவண்ண முதலியார்	5—0—0
,,	மாகாளி முதலியார் (பத்ரகவுண்டன்புதூர்)	1—0—0
	அவிஞசி நெசவாளர் கூட்டுறவு சங்க அங்கத்தினர்களின் நன்கொடை.	
திரு.	V. சொக்க முதலியார்	5—0—0
,,	K. சுப்ரமணியம்	5—0—0
,,	A. N. சுப்ரமணியம்	3—0—0
,,	அ. குழந்தைவேல்	2—0—0
,,	K, சவுண்டப்ப செட்டியார்	2—0—0
,,	T. K. ஷண்முக முதலியார்	2—0—0
,,	K. S. ராமமூர்த்தி	1—0—0
,,	தா. ஆறுமுக முதலியார்	1—0—0
,,	காளியப்ப முதலியார்	1—0—0

ஆக மொத்தம் ரூ. 798—4—0

(தொடரும்)

வியாபாரிகளின் இந்தக்கூற்று ஒன்றே டெக்ஸ்டைல் இலாகாவின் நூல் அலாட்மெண்ட் கொள்கையை அம்பலப்படுத்தப் போதுமானதாகும். சேலத்தில் தேங்கிவிட்ட 60 நெ. நூல் ராஜ்யத்தில் வேறு ஓர் பகுதியில் எங்கோ தேவையிருக்கிறது என்பதும், அங்கு கொண்டுபோய் நாங்கள் விற்றுக்கொள்ளத் தயாராக இருக்கின்றோமென்பதும் எதைக் குறிக்கிறது?

நிச்சயமாகவே வேறு ஓர் பகுதியில் நூல் இல்லாதது திண்டாடும் நெசவாளர்கள் இருப்பதையும், அவர்களுக்கு நேர்மையான பாதையில் நியாய விலைக்குப் போய்ச் சேரவேண்டிய நூல் சேர்க்கப்படாமல் குருட்டுத் தனமான வினியோகக் கொள்கையால் சேலத்தில் வந்து தேங்கிவிட்டதையும்தானே இச்செய்திகள் நமக்கு தெளிவாக்குகின்றன?

எனவே, நூல் நெருக்கடி மிகுந்துள்ள இக்காலத்தில் இதுபோன்ற தவறுகள் நிகழாமல் பார்த்துக்கொண்டு எந்த நெம்பர் நூல் எந்த இடத்திற்கு எவ்வளவு தேவையோ அதை அடிப்படையாகக் கொண்டு அலாட்மெண்ட் போடவேண்டுமாய் கோருகிறோம்.

கோபிசெட்டிபாளையம் நெசவாளர்

கூட்டுறவு சங்கம் லிமிடெட்,

கச்சேரி வீதி, கோபிசெட்டிபாளையம் P. O.

....

அழுத்தமான நெசவு! கெட்டிச் சாயம்!

நாங்கள் 26, 30, 40 நெம்பர் நூல்களில் கலர்ஷர்ட்டிங் பீசுகள், வேஷ்டி, துண்டு மடிகள், வெள்ளை, காரிக்கன் காடா பீசுகள், போன்ற ரகங்களை திறமைமிக்க எங்கள் சங்க அங்கத்தினர்களின் சொந்தத் தறிகளில் புத்தம் புது மோஸ்தர்களில் தயார்செய்து வருகிறோம்.

ஏற்றுமதியாளர்களுக்கும், வர்த்தகர்களுக்கும், வாடிக்கைக்காரர்களுக்கும் விசேஷ சலுகைகள் உண்டு.

விவரங்களுக்கு எழுதக் கோருகிறோம்.

K. S. முத்துக்குமார், தலைவர்,

(11ம் பக்கத் தொடர்ச்சி)

ளையல்லாது நாளடைவில் அவர்கள் வெறும் நடைப்பிணங்களாக ஆவதிலிருந்து தடுத்துவிடவே முடியாது.

அடுத்த படியாக, ஒரு குறிப்பிட்ட குறைந்த காலத்திற்குள் ஓரளவாவது தங்கள் அவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கான தொழில்களில் ஈடுபடுத்தவேண்டும். ஒரு காலத்தில் நம்நாட்டின் சுபீட்சத்திற்கு ஆணிவேராக இருந்துவந்ததும் கிராமப்புறங்களிலிருந்து வந்த சுயேச்சையான குடிசைத் தொழில்கள். அன்னிய ஆதிக்கம் தன்னுடைய உற்பத்திப் பொருள்களின் மார்க்கெட்டுக்காக நமது கிராமக் கைத்தொழில்களை அழித்துவிட்டது. அந்தத் தொழில்கள் மீண்டும்உயிர்ப்பிக்கப்படவேண்டும். விவசாயிகளை ஈந்தக் குடிசைத் தொழில்களில் இடுபடுத்துவது பஞ்ச நிவாரணத்துக்காக இப்போது இருந்தாலும், நிலைமைகள் திருந்தி விவசாயம் சரியாகநடக்கின்ற காலத்திலும்கூட கிராம விவசாயிகளின் பொருளாதார வசதிகளை உயர்த்துவதற்கு அத் தொழில்கள் பயன்படலாம். உடனடியாகப் பயன்படக் கூடிய குடிசைத் தொழில்களில் கதர் உற்பத்தியும் ஒன்று. தனிப்பட்டவர்கள் கதர் உற்பத்தி செய்வதை சர்க்கார் இப்போது தடை செய்திருக்கிறது. இந்தத் தடை உடனடியாக நீக்கப்பட வேண்டும். இதோடு இன்னும் சாத்தியமான வகையில் எல்லாக் கிராமங்களிலும் அதிகப் பொருட்செலவில்லாமலும் அகப்படக் கூடிய மூலப் பொருள்களைக் கொண்டும் உற்பத்தியாகக்கூடிய பொருள்களைக் குடிசைத்தொழில்களில் சேர்த்து அவைகளில் பஞ்சப்பிரதேச ஏழைகளைஈடுபடுத்தப்படவேண்டும்.

இந்த வேலைகளைச் செய்து முடிப்பதில் சர்க்கார் இப்போது இருக்கும் பஞ்ச நிவாரணக் கமிட்டிகளின் உதவியைப் பயன்படுத்திக்கொள்வது நல்லது. இதைப் பஞ்சநிவாரணக்கமிட்டியினரும் வற்புறுத்தியுள்ளனர்.

எப்படியும் இந்த நடவடிக்கைகளில் ஒருபகுதியையாவது சர்க்கார் காலம் தாழ்த்தாது எடுத்துக்கொள்வதுதான் சிறந்த நடவடிக்கையாக இருக்கும். அரசியல்வாதிகளும், பொதுஜனஸ்தாபனங்களும்கூட அதற்காக சர்க்காரை வற்புறுத்துவது உபயோகமாக இருக்கும்.

சர்க்கார் நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்வரை பட்டினி கிடப்பவர்களுக்கு நிவாரணமின்றிப் போய்விடவும் கூடாது. இப்போது பரோபகாரச் சிந்தனையுடன் நடத்தப்பட்டு வரும் கஞ்சித் தொட்டிகளின் வேலைகள் மேலும் விரிவாகவும், விடுபடாமலும் நடத்தப்படவேண்டும்.

கஞ்சித் தொட்டி நடத்தும் பஞ்ச நிவாரணக்கமிட்டியாருக்கு இதில் எல்லாப் பக்கங்களிலிருந்தும் ஆதரவு கிடைக்க வேண்டும்.

பாரதியார் கூறியதுபோல நிதி மிகுந்தவர் பொற்குவையும், நிதி குறைந்தவர் காசுகளையும், சுருக்கமாக சாத்தியப்பட்ட அளவு இல்லை என்னாது பஞ்சநிவாரணக் கமிட்டியாரிடம் கொடுத்து மக்கள் அதை ஊக்குவிக்கவேண்டும்.

கைவசம் தானியம் வைத்திருக்கும் நிலச் சொந்தக்காரர்கள் தானியமாக முடிந்தவரையில் கொடுக்கலாம். ஜவுளி வியாபாரிகள் பஞ்சப் பிரதேச மக்களுக்குத் துணிகள் கொடுத்துதவலாம். பஞ்சத்தால் வாடும் மக்களுக்குத் துணியும் அவசியந்தான். அன்றாட அவசியப் பொருள்களில் வியாபாரம் செய்பவர்கள்கூட அவசியப் பொருள்களாகவே கொடுத்துதவலாம்.

அடுத்து வரும் பொதுத்தேர்தலுக்காக செலவழிக்கத் தயாராகிக்கொண்டிருக்கும் அரசியல் கட்சிகள் தங்கள்கவனத்தில் ஒரு பகுதியை மக்கள் உயிரைப் பாதுகாக்கும் இந்தப் பஞ்ச நிவாரண வேலைகளின் பக்கத்தில் திருப்புவது மிக அவசியம்.

குறிப்பு:— பஞ்சத்தின் கோரப்பிடிப்பிற்குள் சிக்கி உழலும் கோவைஜில்லா மக்களுக்கு உதவ முன்வருபவர்கள் ஸ்ரீ. வி. சி. பழனிசாமிக் கவுண்டர், பஞ்ச நிவாரணக் கமிட்டித் தலைவர், வெள்ளக்கிணர். பி. ஒ. என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கக் கோருகிறோம்.

பத்திரிகை,

—விமர்சனம்.

"கோவைக் குரல்"

வார வெளியீடு.

ஆசிரியர்: கே. பி. சாரதி, கோவை

விலை 1 அணா.

நம்மில் பலருக்கு ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால், நடக்கும் செய்திகள் எல்லாம் தெரிந்திருக்கும்; தங்களூரில், அல்லது தங்கள் ஜில்லாவில் நடந்த ஒரு நல்லசம்பவம்தெரிந்திருக்காது. பிரஞ்சு தேர்தல்களின் விளைவுகளைப்பற்றி, பிரஞ்சுதேச அரசியல்வாதிகளுக்குக்கூட தெரியாத நுணுக்கங்களோடு விவாதித்து முடிவு கூறுவோம். நம் உள்ளூரில் பொதுமக்களைப்பாதிக்கும் ஒரு சிறு பிரச்னைக்கு பரிகாரம் கூறநமக்கு சக்தியிருக்காது.

பிரிட்டன் முதலிய நாடுகளில் தேசம் பூராவும் லட்சக்கணக்கில் வாசகர்களையுடைய பெரிய பத்திரிகைகளுக்குச் சமமான செல்வாக்குடன் ஒவ்வொரு பிரதேசத்திலும் உள்ளூர் பத்திரிகைகளும் பிரசுரமாகின்றன. சில சந்தர்ப்பங்களில் உள்ளூர் பத்திரிகைகளுக்கு இருக்கும் செல்வாக்கு பெரிய பெரிய பத்திரிகைகளுக்குக் கூட கிடைப்பதில்லை.

உள்ளூர் பத்திரிகைகள், அவை பிரசுரிக்கப்படும் பகுதிமக்களுடைய உள்ளங்களோடு ஒன்றி விடுபவை. அவர்களுடைய அன்றாடப் பிரச்னைகளுக்குப் பரிகாரம் தேட அவை பயன்படுகின்றன. உணவு, உடை, கல்வி, சுகாதாரம் ஆகிய பிரச்னைகளில் உள்ளூர் பத்திரிகைகள் அரசியல், குழு, கோஷ்டி பிரிவினை மனோபாவத்தோடின்றி உடனடியான யதார்த்தமான பரிகாரங்களை எடுத்துக் காட்டுகின்றன. அதனால் மக்களுக்கு நல்ல சேவை செய்து அவர்களுடைய செல்வாக்கையும் பெற்றுவிடுகின்றன.

நம் நாட்டில் இன்னும் குறிப்பிடத்தக்க அளவுக்கு அத்தகைய உள்ளூர் பத்திரிகைகள் தோற்றுவிக்கப்படவில்லை. கோவையைப் பொறுத்தவரை அக் குறையை இப்போது வெளியாயிருக்கும் **"கோவைக் குரல்"** தீர்த்து வைக்கிறது. எனவே அதை முழுமனதுடன் நாம் வரவேற்கிறோம்.

"கோவைக் குர" லின் இரண்டாவது "ஒலி" நம் பார்வைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதில் ஜவுளிக் கட்டுப்பாடு பற்றிய நீண்ட கட்டுரை ஒன்றும், நேயர்களின் கடிதங்கள் சிலவும், சில உள்ளூர் செய்திகளும், சினிமாச் செய்திகளும் இடம்பெற்றிருக்கின்றன. பிரசுரிக்கப்பட்டிருக்கும் செய்திகள் அனைத்தும் தினசரிப் பத்திரிகைகளில் வெளியாகும் பாணியிலேயே அமைந்து இருக்கின்றன. அதற்குப்பதில்செய்திகளின் முக்கியத்துவத்தைக் தொகுத்து எடுத்துக்காட்டிப் பிரசுரித்தல் நலம்.

ஜவுளிப் பித்தனின் 'ஜவுளி விநியோகமும் கட்டுப்பாடும் வெற்றி பெறாததேன்'' என்ற தலைப்பில் வெளியாகியுள்ள கட்டுரைக்கும் தலைப்பிற்கும்இருக்கும்சம்பந்தம் என்னவென்றே தெரியவில்லை. கட்டுரையாளர் ஜவுளி வியாபாரிகள் ஸ்தாபன ரீதியாக இணைய வேண்டிய அவசியம் பற்றியே அக்கட்டுரையில் கூறியிருக்கிறார். கட்டுப்பாடு பற்றி அவருடைய அபிப்பிராயம் என்னவென்று கட்டுரையிலிருந்து விளங்கவில்லை.

"கோவைக் குர" லின் ஆரம்ப "ஒலி" இதுதான். இனி வருங்காலத்தில் குறைகள் நீங்கி "குரல்" கோவை மக்களின் குரலாகப் பரிணமிக்கும் என்று நம்புகிறோம். அதற்கு பொதுமக்களின் ஆதரவு "குரலு"க் குத் தேவை. அது கிட்டவேண்டும் என ஆசைப்படுகிறோம். —ஆர். எம். கே.

"விடி வெள்ளி"

விலை 2 அணா

ஆசிரியர் : வ. விஜயபாஸ்கரன், 6/1, ராமசாமி நாய்க்கர் தெரு, சென்னை 18.

சென்னையிலிருந்து வெளியாகும் புதுமை வார வெளியீடு இது. இதன் 7, 8 வது இதழ்கள் நம் பார்வைக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன.

இவைகளில் "பாரதி மக்கள் கவிஞன்' என்ற கண முத்தையாவின் ஆராய்ச்சிக் கட்டுரையும் 'புதுமைப்பித்தன் பேசினார்' என்ற ரகுநாதனின் கட்டுரையும், ஆசிரியர் புதுமைப் பித்தனின் சிருஷ்டிகளின்மீது செய்துள்ளதத்துவரீதியான தீர்ப்பும் அறிவுக்குப் புதிய ஒளியை அளிக்கிறது.

தவிர, உலகப் புகழ் பெற்ற இலக்கிய மேதை மாக்ஸிம் கார்க்கியை புதிய பாணியில் வாசகர்களுக்கு அறிமுகம் செய்துவைக்கும கட்டுரை கனகம்பீரமாகவே அமைந்திருக்கிறது.

"ஓர் இரவு" சினிமாபற்றிய விமர்சனம் எவரையோ திருப்திப்படுத்த எழுதப்பட்டதுபோலத் தானிருக்கிறது. ஸ்ரீனிவாசனுடைய "முஜபர்ஜங் பஹதூர் தெரு" என்னும் கதை எந்த நல்ல அம்சத்திற்காகப் பிரசுரிக்கப்பட்டதோ தெரியவில்லை.

இதுபோன்ற சில்லறைக்குறைபாடுகள் தவிர்க்கப்படும் என்று நம்புகிறோம். மற்றபடி அதன் அரசியல் அபிப்ராயத்தில் "சௌகரியக்காரக் கூட்டம்" தவிர வேறு எவரும் எதிர்க்கவேண்டிய அவசியமில்லாததால் அதுபற்றி இங்கு விமர்சிக்கவேண்டுவதில்லை.

புதுமை விரும்பிகள் அனைவருமே "விடி வெள்ளி" யை அவசியம் வாசிக்க வேண்டுமென்று நாம் சிபார்சு செய்கிறோம்.

—"கிருமி"

குவியல்முறை நூல் விநியோகம் வேண்டாம்

மந்திரி மேதாபிடம்

த. நா. கை. நெ. சம்மேளனம் தூது.

இந்திய சர்க்கார் கைத்தொழில் வர்த்தக இலாகா மந்திரி கனம் ஹரிகிருஷ்ண மஹதாப் சென்ற 28-6-51ல் சென்னைக்கு விஜயம் செய்தபோது தமிழ் நாடு கைத்தறி நெசவுத் தொழிலாளர் சம்மேளனத்தின் சார்பில் சம்மேளனப் பொதுக்காரியதரிசி கே. எஸ். பார்த்தசாரதியின் தலைமையில் மாகாணத்தொழிற்சங்க காங்கிரஸ் காரியதரிசி கே. முருகேசன், தென்ஆற்காடு எஸ். நடராஜன், திருநாகேஸ்வரம் கண்ணப்பா, ஜி. சாமுவேல் ஆகியோரடங்கிய தூதுகோஷ்டியொன்று அவரைப் பேட்டி கண்டது.

சென்ற ஜனவரி மாதம் மந்திரி சென்னைக்கு விஜயம் செய்துவிட்டுப் போனபிறகு நெசவாளர் உலகில் ஏற்பட்ட கஷ்டங்களை தூதுகோஷ்டி மந்திரிக்குத் தெரிவித்தது.

சென்னைக்கு சப்ளை செய்யப்படுமென்று வாக்களிக்கப்பட்ட நூல் பூராவாக சப்ளை செய்யப்படாமல் விடப்பட்டது என்றும், சப்ளை செய்ததும் தேவையானதாக இல்லாமலிருந்தது என்றும் மகஜரில் எடுத்துக் காட்டப்பட்டது.

மந்திரியிடம் சமர்ப்பித்த மகஜரில் தூதுகோஷ்டி கீழ்வருபனவற்றைத் தெளிவாக்கியது:—

சென்ற மாதங்களில் தறி ஒன்றுக்கு இரண்டு பவுண்டுகளுக்கு மேல் நூல் சப்ளைசெய்யப்படவே இல்லை. நூலின் விலையும் உயர்த்தப்பட்டிருக்கிறது. ஜனவரி மாதத்தில் கள்ளமார்க்கெட்டிலாவது நூல் கிடைத்துவந்தது ஜனவரியில் ரூ. 40 முதல் 51 வரை விற்றுவந்த நூல் இப்போது ரூ. 50 முதல் 100 வரை விற்கப்படுகிறது.

9. ரூபாய்க்கு அப்போது கிடைத்துவந்த கைத்தறி சேலையின் விலை இப்போது 17 ரூபாய்க்கு உயர்ந்து விட்டது. அவ்வளவு பணம் கொடுத்து வாங்கும் நிலையில் பொதுமக்கள் இல்லாததால் கைத்தறி சேலை விற்பனை ஒரேயடியாக விழுந்துவிட்டது.

1947ல் புடவை நெய்யும் தொழிலாளிக்கு 7 ரூபாய் கூலியாகக் கிடைத்தது. 1951 ஜனவரியில் அது ரூ. 1—4—0 ஆக இறங்கி இப்போது வெறும் 12 அணாவாகிவிட்டது.

நூல் உற்பத்தியில் உபரி மாகாணமாகிய சென்னை மாகாணத்திற்கு அகில இந்திய அடிப்படையில் நூலை மொத்தமாக குவியல் முறையில் மத்திய அரசாங்கம் விநியோகிப்பதால் தேவைப்படும் நூல் வேண்டிய அளவில் கிடைக்காமல் போய்விடுகிறது. பம்பாயிலிருந்து 7500 பேல்கள் நூலும்; அஹமதாபாத்திலிருந்து 6068 பேல்களும், ஷோலாப்பூரிலிருந்து 1000 பேல்களும், பரோடாவிலிருந்து 8000 பேல்களும், மற்றும் பம்பாய்க்கு அருகாமையிலுள்ள மில்களிலிருந்து 800 பேல்களும் சென்னை மாகாணத்திற்கு ஒதுக்கப்பட்டதாகவும் போக்குவரத்து வசதிக்குறைவினால் அந்த நூல் வந்துசேரவில்லையென்றும் கூறப்படுகிறது. இதை தூதுகோஷ்டி மந்திரிக்கு விவரித்து உபரி மாகாணமாகிய சென்னை மாகாணத்தில் உற்பத்தியாகும் நூலில் அதன் தேவைக்கானவற்றை இங்கே எடுத்துக்கொண்டு மீதியைமட்டும் மற்ற மாகாணங்களுக்கு அனுப்புவதுதான் விவேகமானது என்று சுட்டிக்காட்டியது.

மேலும் உள்நாட்டில் உற்பத்தியாகும் குறைந்த விலைப் பஞ்சை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்வதையும் உயர்ந்த விலைப் பஞ்சை வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதைத் தடுக்க வேண்டுமென்றும், நூலை மில்களிலிருந்து வாங்கும் பூரா உரிமையும் நெசவாளர் கூட்டுறவு சொசைட்டிகளுக்கே இருக்கவேண்டுமென்றும், நூலின் விலை 1947ம் வருஷத்தின் விலைக்குக்குறைக்கப்பட வேண்டுமென்றும், கட்டாய நூல் விநியோகம் அமுல் நடத்தப்பட வேண்டும் என்றும் தூதுகோஷ்டி மகஜரில் கூறியிருக்கிறது.

வெளிநாடுகளிலிருந்து பட்டும் செயற்கைப் பட்டும் இறக்குமதி செய்வது கூட்டுறவு சங்கங்களிடம்தானிருக்கவேண்டும்என்றும் அந்தப்பட்டுகளுக்கு வரிகூடாது என்றும் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

"கைத்தறி" வெளியீடு 1

கைத்தறி நெசவாளரின் இன்றைய அவல நிலையைப் படம் பிடித்துக் காட்டும் புதுமைப் பாடல்கள்!

"தறி சிந்திய கண்ணீர்"

(ஆக்கியோன்: மா. கல்யாணம்)

தயாராகிறது **விலை அணா 2.**

தபாலில் பெற 3 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

வியாபாரிகளுக்கும், "கைத்தறி" ஏஜண்டுகளுக்கும் 25 சதவிகித கமிஷன் உண்டு. தேவைக்கு 25% முன்பணத்துடன் எழுதுக.

: விபரங்களுக்கு :

கைத்தறி காரியாலயம்,

முத்தண்ணன்குளம் வீதி, கோவை.

சந்தா நேயர்களுக்கு
அறிவிப்பு.

"கைத்தறி"க்கு ஆண்டு சந்தா செலுத்தியவர்களின் சந்தாக் காலம் முடிவடைந்ததும், நம் காரியாலயத்திலிருந்து அதைப் பிரத்யேகமான தபால் மூலம் சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவிக்கப்படுகிறது,

அதன்படி சென்ற மாத இதழோடு சந்தா காலம் முடிந்துபோன நேயர்களுக்கு நாம் அச்செய்தியைத் தபால் மூலம் தெரிவித்திருந்தோம். பலர் தங்களின் சந்தா தொகையை மணியார்டர் மூலமாக அனுப்பி சந்தாவைப் புதுப்பித்துக் கொண்டுள்ளார்கள்.

இன்னும் சிலரும், சில நெசவாளர் கூட்டுறவு சொசைட்டிகளும் தங்களின் சந்தா தொகையை அனுப்பி சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளாமலிருக்கின்றனர். அவர்களுக்கு மீண்டும் ஞாபகப்படுத்தும் முறையில் இம்மாத இதழை அனுப்பி வைக்கிறோம்.

இதைப் பார்த்தும் சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளாதவருக்கும் அடுத்த இதழ் கண்டிப்பாக அனுப்பப்படமாட்டாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

நிர்வாகி,
"கைத்தறி"

நெசவாளர் குரல்.

நெய்யப் பிறந்தவர் நாம்!—இந்த
உய்ய வழி தருவீர் எனப்
பையப் புகன்றிடினும் அவர்
நொய்யப் புடைக்கின்றார்! அவர்
நொய்யப் புடைக்கின்றார்!

கூட்டங்கள் கூடியே நாம்—இந்த
கூலி முழக்கிடினும் எங்கள்
வீட்டு நிலை அறியார் அவர்
நாட்டினை ஆளுகின்றார்! அவர்
நாட்டினை ஆளுகின்றார்!

பிச்சை எடுத்திடவோ?—அன்றி
நச்சை அருந்திடவோ?
இச்சைகள் இல்லை ஐயா! எம்
பச்சை மொழி யிதுகாண்! எம்
பச்சை மொழி யிதுகாண்!

வேதும் தணல் வயிற்றில்—எலும்
பாதும் மழலையிலே மனைவி
ஆதும் விழிநீரில் அரசு
வேதுதல் திண்ணமய்யா! நாளும்
வேதுதல் திண்ணமய்யா!

—சேது. இளங்கோ.

சென்னிமலை கைத்தறி நெசவாளர்
கூட்டுறவு சங்கம் லிமிடெட்,

சென்னிமலை P.O.

....

கெட்டிச் சாயம்! **அழுத்தமான நெசவு!**

எங்களிடம் 20 நெ. முதல் 30 நெ. வரை நூலில் எங்கள் சங்க அங்கத்தினர்களால் தயார் செய்த 5, 6, 7, 7½, 8 கெஜம் 42'' 44'' கலர் சேலைகளும், வேஷ்டி, துண்டு, காடா ரகங்களும்

விலை சரசமாய்க் கிடைக்கும்.

கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கும், ஏற்றுமதியாளர்களுக்கும் விசேஷ சலுகை உண்டு.

M. P. நாச்சிமுத்து, B. A.. B L.,
தலைவர்.

திருச்செங்கோடு கைத்தறி நெசவாளர்
கூட்டுறவு விற்பனைச் சங்கம்

லிமிடெட், No. S. 523.

சங்ககிரி R. S. திருச்செங்கோடு. (சேலம் ஜில்லா)

........o........

எங்களிடம் 1,600 தறிகளிலிருந்து நவீன டிசைன்களில் தயாராகும் அடியிற்கண்ட ரகங்கள் சரசமான விலைகளுக்குக் கிடைக்கும்.

கோட்டிங், ஷர்டிங் பீஸ்கள்
சலவை, காடா பீஸ்கள்
துண்டு, வேஷ்டித் தான்கள்

தேவையுள்ளோர் விபரங்களுக்கு எழுதவும்.

K. A. காசிவிஸ்வநாத முதலியார்,
தலைவர்.

கைத்தறி ஜவுளி ஏற்றுமதி, வெளிநாட்டு நூல் இறக்குமதி, முதலியவைகள் கூட்டுறவு இயக்கத்தின் மூலமே நடைபெறவேண்டும்.

தமிழ் நாடு கைத்தறி நெசவாளர் சம்மேளனத்தின் 'கன்வென்ஷனி'ன் முடிவுகள்.

தமிழ் நாடு கைத்தறி நெசவாளர் ஸ்தாபனங்களின் நிர்வாகக் கமிட்டி அங்கத்தினர்களின் கன்வென்ஷன் சென்ற மாதம் 4, 5, 6 தேதிகளில் சென்னையில் நடைபெற்றது. அகில இந்திய தொழிற்சங்ககாங்கிரஸியின் தலைவர் திரு. வி. சக்கரை செட்டியார் சன்வென்ஷனுக்கு தலைமை வகித்தார்.

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் சம்மேளனப்பொதுக் காரியதரிசி திரு. கே. எஸ். பார்த்தசாரதி அங்கத்தினர்களைவரவேற்றுப்பேசுகையில், கைத்தறி நெசவுத்தொழிலின் தற்கால நிலைமைகளை விவரித்துரைத்தார்.

நெசவாளர்களின் தறிகள் நூலின்றி ஓய்ந்து கிடப்பதற்கும், அதன் விளைவாக நெசவாளர் மத்தியில் பட்டினி, தற்கொலை, வீடு வாசல் பெண்டு பிள்ளைகளை விட்டு விட்டு ஓடுதல், பிச்சை எடுத்தல் போன்ற பரிதாபமான நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கும் இன்றைய ஆளும்காங்கிரஸ் சர்க்காரின் நிர்வாகமும், பொறுப்பின்மையுமே காரணங்களாகும் என்றும், அத்தோடு ஆட்சியாளர்கள் கைத்தறி உற்பத்திகளின் எற்றுமதியைத் தடுத்து நிறுத்திவிட்டு மில் உற்பத்திகளை ஏற்றுமதிக்கு அனுமதித்ததன் மூலமும், கைத்தறித் துணிகளுக்கு உயர்ந்த வரிகளை விதித்தது மூலமும், விலைகளை சுமார் பத்து மடங்குக்கு மேல் உயர்த்தப்பட்டது மூலமும், எற்றுமதிக்காக மிகவும் உயர்ந்த ரகங்களை மட்டும் அனுமதித்ததன் மூலமும், முதலாளிகளின் லாபத்தை உத்தேசித்து இந்தநாட்டில் விளையும் குறைந்த விலைப் பருத்தியை அயல் நாடுகளுக்கு அனுப்பிவிட்டு, வெளி நாடுகளிலிருந்து உயர்ந்தவிலையில் பருத்தி இறக்குமதி செய்ததன் மூலமும் கைத்தறி தொழிலைப் பலவீனப்படுத்தி விட்டார்கள்" என்று பார்த்தசாரதி கூறினார்.

"நூல் வினியோகத்திற்காக நியமிக்கப்பட்ட அட்வைசரிக் கமிட்டிகளில் வேண்டப்பட்டவர் வேண்டப்படாதவர் என்றெல்லாம் பாகு படுத்திப் பார்ப்பது போன்ற ஊழல் காட்டப்படுகிறது. தறிகளுக்கு நூல் கிடைப்பதில்லை" என்று அவர்மேலும் சொன்னார்.

கீழ் வரும் தீர்மானங்கள் கன்வென்ஷனில் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டன.

1) இம்மாகாணத்தின் கைத்தறி உபயோகத்திற்கும் இதர உபயோகத்திற்கும் முறையே 30 ஆயிரம் பேல்களும், 8 ஆயிரம் பேல்களும் நூல் மாதாந்திர தேவையாகும். இம் மாசாண மில் நூல் உற்பத்தியில் இருந்து மேற்கண்ட அளவு நூலை இங்கேயே நிறுத்திக் கொண்டு மீதமுள்ளதை பட்டுமே இதர தேவையான பிரதேசங்களுக்கு அனுப்பவேண்டும் என்று சர்க்காரை இக்கூட்டம் கேட்டுக் கொள்ளுகிறது

2) மில்களிலிருந்து நூலை வாங்கும் அதிகாரம் கூட்டுறவு சங்கங்களுக்கே கொடுக்கப்பட வேண்டும்.

3) ஜில்லா கூட்டுறவு எம்போரியங்களின் மூலமாக உண்மையான நூல் வியாபாரிகளுக்கு மட்டும் நூல் விற்பனைக்காக வினியோகிக்கப்படவேண்டும்.

4) ஒரு நூல் வியாபாரியிடம் 200-க்கு மேற்பட்ட நூல் கார்டுகள் பதிவு செய்யப்படக் கூடாது. அந்தக் கார்டுகளுக்குத் தேவையான நெம்பர் நூல்கள் மட்டுமே அந்தவியாபாரிக்கு விநியோகிக்கப்படவேண்டும்.

5) ஒவ்வொரு கார்டிலும் ஒவ்வொரு தறிக்கும் ஒதுக்கப்பட்டுள்ள நூல் அளவு குறிக்கப்படவேண்டும். அதைப் பொருத்தே சப்ளையும் செய்யப்படவேண்டும்.

6) நூல் உபயோகிப்போர் தாங்கள் வசிக்கும் இடங்களிலிருந்து 30 மைல் 40 மைல் தூரத்திற்கு மேலுள்ள இடங்களுக்குப் போய் நூல் வாங்கக் கூடிய நிலைமைகள் கைவிடப்பட்டு 3, 4 மைல் தூரத்திற்குள்ளாகவே நூல் வாங்கிக் கொள்ளக்கூடிய ஏற்பாடு அமல் படுத்தப்பட வேண்டும்.

7) மாஸ்டர் வீவர் கோட்டாக்களும். கன்ஸ்யூமர் கோட்டாக்களும் பூரணமாக ரத்து செய்யப்பட வேண்டும்.

8) கலர் நூல் விநியோகம் பூரணமாகக் கைவிடப்படவேண்டும்.

9) சாயச்சாலைகளுக்கு நேர்முகமாக நூல் சப்ளை செய்யப்படு

1 அணா, ½ அணா
பாக்கெட்டுகளில்
எங்கும் கிடைக்கும்.

அம்பிகா பல்பொடியை
உபயோகியுங்கள்
MFR: டாக்டர் A. பெருமாள்
69, மீன்கரைரோடு, பொள்ளாச்சி

ஏஜண்டுகள் இல்லாத
ஊர்களுக்கு
ஏஜண்டுகள் தேவை.

வது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

10). கூட்டுறவு சொஸைட்டிகளில் தறி சொந்தக்காரர்களே அங்கத்தினர்களாக வேண்டும்.

11) 1947-ம் வருஷத்திலிருந்த விலைக்கு நூலின் விலை குறைக்கப்பட வேண்டும்.

12) இன்பார்மல் நூல் சப்ளையும், விநியோகமும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

13) கட்டாய நூல் விநியோகம் அமுலுக்குக் கொண்டுவரப்பட வேண்டும்.

14) மாகாணத்தின் தேவைக்காக நூல் வாங்குவதும், தேவையான நூல் உற்பத்தி செய்யப்படுவதும், நூல்விநியோகமும் மாகாண சர்க்காரின் நேரடிப் பார்வையின் கீழ் கொண்டுவரப்படவேண்டும்.

15) வெளி நாடுகளுக்கு கைத்தறி ஜவுளிகள் ஏற்றுமதி செய்யப்படுவது கூட்டுறவு சொஸைட்டிகளின் நேர் பார்வையில் இருக்கவேண்டும்.

17) ஐரோப்பிய கம்பெனிகள் வெளிநாடுகளுக்குக் கைக்குட்டைகள் ஏற்றுமதி செய்வதைத் தடுத்து, அந்த உற்பத்திக்காக இந்திய உற்பத்தியாளர்களுக்கு நூல் கோட்டாவை அதிகப்படுத்த வேண்டும்.

17) ஜப்பான் பட்டின்மீதும், செயற்கைப் பட்டின் மீதும் உள்ள வரியை நீக்கவேண்டும்.

18) மேற்கண்டபட்டு இறக்குமதி செய்வதும் விநியோகிப்பதும் கூட்டுறவு சொஸைட்டிகளால் செய்யப்பட வேண்டும்.

19) பொதுவாக நெசவாளர்கள் நடத்துகின்ற சத்தியாக்கிரக இயக்கங்களையும் சிறப்பாக சேலம், அருப்புக்கோட்டை, ஸ்ரீவில்லிப்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, சென்னை போன்ற இடங்களில் நடைபெற்ற சத்தியாக்கிரகங்களையும் கன்வென்ஷன்பாராட்டுகிறது சர்க்கார் சமாதானமான முறையில் மறியல் நடத்திய நெசவாளர்களின் மீது தடியடிப் பிரயோகம் செய்ததைக் கண்டிக்கிறது.

20) 73 இடங்களில் பட்டினி ஊர்வலங்களும், மறியல் முதலியவைகள் நெசவாளர்களின் அதிருப்தியைக் காட்டுவதற்காக நடத்தப்பட்டிருக்கின்றன. அவைகளை ஆட்சியாளர் உதாசீனப்படுத்தியிருக்கின்றனர். எனவே எல்லா சங்கங்களும், கட்சிகளும் தனிப்பட்ட அங்கத்தினர்களும் இத்தகைய இயக்கங்களில் ஒன்று திரள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

21) வரப்போகும் தேர்தலை முன்னிட்டு, பேச்சு, எழுத்து சுதந்திரங்களும்; கூட்டம் கூடும் சுதந்திரமும் வேண்டும். அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும். சம்மேளனத் தலைவர் பீ. ஜீவானந்தம் நிபந்தனையின்றி விடுவிக்கப்பட வேண்டும். தலைவர்கள் மீது தொடரப்பட்டிருக்கும் சதி, கிரிமினல் வழக்குகள் வாபஸ் பெறப்பட வேண்டும். பார்த்தசாரதியும் மற்றும் 11 பேர்களுக்கும் காஞ்சீபுரம் போன்ற இடங்களில் கூட்டம் போடுவதற்கு 144 தடை விதிக்கப்பட்டிருப்பது வாபஸ் பெறப்படவேண்டும்.

22) கருப்பு மசோதாக்கள் உடனடியாகக் கைவிடப்பட வேண்டும்.

23) அரசியலமைப்பின் 19(2) விதி திருத்தப்பட்டுள்ளதை கன்வென்ஷன்கண்டிக்கிறது.

24) 24-6-51-ந் தேதியை நூல் பஞ்ச தினமாகக் கொண்டாட வேண்டுமென்றும், அந்தத் தினத்தில் கூட்டங்கள், ஊர்வலங்கள், ஹார்த்தால்கள் நடத்தி சர்க்காரின் நடவடிக்கைக்கு ஆட்சேபங் காட்ட வேண்டுமென்றும் எல்லா நெசவாளர் சங்கங்களும் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

25) கைத்தறி நெசவாளர்களின் மறியல்களைப் பற்றியும் போராட்டங்களைப் பற்றியும் பிரசுரிக்கும் பத்திரிகைகளுக்கு கன்வென்ஷன் நன்றிதெரிவிக்கிறது.

26) ஆகஸ்டு மாதம் 14, 15 தேதிகளில கடலூரில் நெசவாளர் மாநாட்டைக் கூட்டுவதென கமிட்டி தீர்மானிக்கிறது. சோஷலிஸ்ட் தலைவி அருணா ஆசப் அலி, அகில இந்திய தொழிற் சங்க காங்கிரஸ் உபதலைவர் எஸ். ஏ. டாங்கே, தலைவர் சக்கரை செட்டியார், தி. மு. க. தலைவர் சி. என். அண்ணாத்துரை, "விடுதலை" ஆசிரியர் எஸ். குருசாமி, எம்.எஸ். ராமசாமிஆகியவர்களை மாநாட்டிற்கு அழைப்பதென முடிவு செய்யப்பட்டது.

"கைத்தறி"
சந்தா விகிதம்
ஆண்டு சந்தா ரூ. 3
தனிப் பிரதி அணா நான்கு.
மாதிரிப் பிரதி வேண்டுவோர் நான்கு அணாவுக்கு தபால் ஸ்டாம்பு அனுப்பவும்.
ஏஜண்டு இல்லாத ஊர்களுக்கு ஏஜண்டுகள் தேவை.
"கைத்தறி" காரியாலயம்,
முத்தணன் குளம் வீதி, கோவை.

ஈரோடு தாலுக்கா நெசவாளரின் துயர்!

ஸ்ரீ எஸ். பி. கருப்பண்ண முதலியாரின் அறிக்கை.

எங்கள் ஈரோடு ஏரியாவில் நூல் ஆலோசனைக்கமிட்டிகளின் மூலம கணக்கெடுக்கப்பட்ட தறிவிபரம் இத்துடன் அனுப்பியிருக்கிறேன். எங்களுக்கு நூல் சரிவர மாதா மாதம் கிடைப்பது கிடையாது. மூன்று அல்லது நான்குமாதங்களுக்கு ஒருமுறை ½ கட்டுநூல் கிடைக்கிறது. அதுவும் அதிகம் என்று எண்ணி 28—5—51-ந் தேதி சர்க்கார் (ஆர்டர்) G. O. நெ. 2411 படி அடியிற் கண்ட விபரப்படி தான் மேற்கொண்டு தறிகளுக்கு நூல் விநியோகம் செய்யும்படி உத்திரவு போட்டிருக்கிறது. 18 நெ. நூல் தறி ஒன்றுக்கு மாகம் 3½ பவுண்டும், 20 நெ. முகல் 30 நூல் வரை தறிக்கு 1½ பவுண்டும், 60 நெம்பரில் தறி ஒன்றுக்கு 3 பவுண்டும், 80 நெ. நூல் தறி ஒன்றுக்கு 2½பவுண்டும், 100 நெ நூல் தறிஒன்றுக்கு 2 பவுண்டும் 2/20 நெ. நூல் தறி ஒன்றுக்கு 4 பவுண்டும்பனியன் மிஷின்களுக்கு கோன் நூல் மிஷின் ஒன்றுக்கு 32 பவுண்டு வீதமும் சப்ளை செய்யும்படி அவ்வுத்திரவு கூறுகிறது. நெசவாளிகளின் கஷ்டத்தை இவ்வுத்திரவு அதிகப்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை.

எங்கள் ஏரியாவில்உள்ள நெசவுத் தொழிலாளர்கள் நெடும் பாவு—அதாவது 72 கெஜம் 80 கெஜம் நீளமுள்ள பாவுதான் தோய்ந்துநெய்து பழக்கம்உள்ளவர்கள். பாவுக்கும் ஊடைக்கும் சேர்ந்து 2¼ கட்டு அதாவது 20 நெ. நூலில் 45 பொந்துகள் வேண்டும். அதற்கு இன்று அவ்வுத்திரவு மூலம் கொடுப்பதாய் சொல்லும் 1½ பவுண்டு நூலுக்கு பொந்து 3 தான் ஆகிறது. 45 பொந்துக்கும் 3 பொந்துக்கும் உள்ள வித்தியாசம் எவ்வளவு? நாங்கள் இந்த நூலைக் கொண்டு தொழில் நடத்த முடியுமா? எங்கள் ஏரியாவில் உள்ள தறிகள் 15434-க்கும்: தறிக்கு ஒருகட்டு வீதம் கொடுத்தால் மாதம் ஒன்றுக்கு 380 பேலும் ஒரு கட்டும் வேண்டும். ஆனல் மே மாதம் 20 நெ. & 30 நெ. ஆகிய இரண்டும்சேர்ந்து அலாட்மெண்ட்போட்ட 68 பேல்களும் ஜூன் மாதம் தான் வந்து சேர்ந்தது. நெ. 30x10 ராத்தல் பேல் 41, 20 x 10 ராத்தல் பேல் 7 ஆக 48 பேல் தான். இவைகளை வைத்துக் கொண்டு ஈரோடு டெக்ஸ்டைல் ரெவின்யூ இன்ஸ்பெக்டரால் எப்படி விநியோகம் செய்ய முடியும்? எங்கள் ஏரியாவுக்கு மட்டும் அல்ல இந்த நிலைமை. சென்னை மாகாணம் பூராவுமே இப்படிப்பட்ட நிலைமைதான் நிலவுகிறது. நிலைமை மேலும் நீடித்துக்கொண்டு போகுமேயானல் நாட்டில் உள்ள நெசவுத் தொழிலாளர்கள் குடும்பங்களில் அநேகம் பட்டினியால் மடிந்து போகும். அந்த நிலைமைக்கு விடாமல்படி எப்படியும் எங்களுக்கு மாதம் ஒரு பாவுக்கு அதாவது 2¼ கட்டு நூல் கொடுத்து எங்கள் நெசவுத் தொழிலாளர்களின் குடும்பங்களின் பட்டினியை அகற்றி அரை வயிற்றுக் கஞ்சியாகிலும் கிடைக்க ஏற்பாடு செய்யும்படி இது சம்பந்தபட்ட அதிகாரிகளை கேட்டுக்கொள்கிறேன்.

கமிட்டிகள் கணக்கெடுத்த தறிகளின் விபரம்.

ஏரியாவின் பெயர்	லோக்கல் தறிகள்	சொசைட்டி தறிகள்
ஈரோடு	4,300	1,000
சிவகிரி	3,989	953
சித்தோடு	1,514	83
சென்னிமலை	3,988	246
துடுப்பதி	1,360	298
ஊத்துக்குளி	1,729	110
குன்னத்தூர்	1,867	973
காஞ்சிக்கோவில்	1,110	
கன்சியூமர் கோட்டா தறிகள்		960
கன்சியூமர் & சொசைட்டி தறிகள்		4,423
ஆக மொத்தம்	19,857	44,23
மீதி லோக்கல் தறிகள்	15,434	
கமிட்டி எட்டிலும் நூல் கொடுக்காத புதிய தறிகள்		2,500

அருப்புக்கோட்டை நெசவாளர் காங்கிரஸ் நிர்வாகிகள் தேர்தல்.

அருப்புக்கோட்டை, ஜூலை 9- நகரசபைத் தலைவர் திரு. ராமசாமி செட்டியார் அவர்கள் தலைமையில், அருப்புக்கோட்டை நெசவாளர் காங்கிரசிற்கு நிர்வாகஸ்தர்கள் தேர்தல் நடைபெற்றபோது கீழ்க்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

அருப்புக்கோட்டை நகரசபை வைஸ் சேர்மன் திரு. ஏ. பி. நாராயணன், தலைவர், திருவாளர்கள் ஏ. ம. சோமசுந்தரம் உபதலைவர், ஏ. பி. துரைச்சாமி காரியதரிசி, எஸ். ராமய்யா உபகாரியதரிசி, எஸ். காமாட்சி செட்டியார் பொக்கிஷதாரர்.

வாழ்வுதான் ஏது?

கோவை, முத்துச்சோழன்.

மேல் துண்டால் திண்ணைத் தூசியைத் தட்டிவிட்டு, அந்தப் பொத்தல் துண்டையே விரித்து, கையைத் தலைக்குயரமாக வைத்துக்கொண்டு படுத்தான் முருகன். தினம் அந்த நேரத்தில் அவன் அடிவயிற்றை பொசுக்கித் தீய்த்துக் கொண்டிருக்கும் பசித்தீ, அன்று அவன் வயிற்றை விட்டு விட்டு நெஞ்சத்தைக் கருக்கிக் கொண்டிருந்தது.

வீட்டிற்குள்ளிருந்து அவனுடைய மனைவி கைக் குழந்தையைத் தொட்டிலில் போட்டு ஆட்டும் சத்தம் அவன் காதுகளில் விழுந்தது. கொந்தளித்துக் குமுறிக் கொண்டிருந்த அவனுடைய நெஞ்சத்தில் அது நிமிஷ அமைதியை ஏற்படுத்தியது. ஆனால் அந்த அமைதி ஒரு நிமிஷ நேரத்திற்கு மட்டும் தானிருந்தது. மீண்டும் அவனுடைய நெஞ்சத்தின் கொந்தளிப்பு முன்னைவிட வேகமாக அலைமோதி ஆர்ப்பரித்தது. அதைத் தாங்காது அவனுடைய மார்புக்கூடே சிதறிவிடுமபோல அவனுக்குத் தோன்றியது.

ஃ ஃ ஃ

இன்றைக்கு முருகன் இருக்கும் நிலைமை அவனுக்கு ஏற்படக்கூடும் என்று இரண்டு வருஷங்களுக்கு முன்னால் யாராவது சொல்லியிருந்தால் அவன் அவர்களைப் பார்த்து நகைத்திருப்பான். அன்றைக்கு அவன் மதிப்புள்ளநடுத்தர நிலைமையிலிருந்தவர்களில் ஒருவன்.

முருகன் ஒரு பாட்டாளிதான் நன்றாக உழைத்துப் பாடுபட்டு கௌரவமாக வாழ்ந்தவன். அவனுடைய தொழில்கைத்தறிசேலை நெய்தல். அது அவனுடைய தொழில் மட்டுமல்ல; பரம்பரை பரம்பரையாக அவனுடைய முன்னோர்களும் அத்தொழிலைத்தான் செய்து வந்தார்கள். அவனும் அவனுடைய மனைவியுமாகச் சேர்ந்து உழைப்பார்கள். அவர்களுடைய உழைப்பு சிரமப்படாமல் மூன்று ஜீவன் பிழைப்பதற்குப் போதிய ஊதியத்தை அளிக்கும். மனக்குறைவின்றி திருப்தியுடன் மனைவியுடனும் 8 வயது மகளுடனும் அவன் வாழ்ந்து வந்தான். இது பத்து வருஷங்களுக்கு முன்னால்.

இரண்டாவது உலக யுத்தம் தோன்றியது. ஆலை உற்பத்திகளில் பெரும்பாலும் ராணுவத் தேவைகளாக மாற்றப்பட்டன. நாட்டு மக்களுக்குக் கைத்தறி துணை நின்றது. வடநாட்டுக்குத் தேவையான வாயல்துணி முதல் உள்நாட்டு தேவையான வேஷ்டி வரை கைத்தறி உற்பத்திசெய்து குவித்தது. நெசவாளர்களின் ஊதியமும் பெருகியது. முன்னால் எல்லாம் 30ம் 40ம் உயர்ந்த பட்ச வருமானமாக இருந்த நெசவாளர்களுக்கு 150, 200 ரூபாய்கள் சாதாரண வருமானமாகக் காணப்பட்டது. அரை வேலை கற்றசிறுவன் கையில்கூட காசு தாராளமாகப் புரண்டுகொண்டிருந்தது. நெசவாளர் வட்டாரமே குபேர பட்டணமாக மாறிவிட்டது, சினிமா தியேட்டர்களும், காபி ஓட்டல்களும் நெசவாளர்களால் செழிப்புப் பெற்றன. பணம் தண்ணீர்பட்டபாடாக ஓடிற்று.

முருகன் பட்டும் அநாவசியமாக பொழுதையோ பொருளையோ செலவிட்டவனல்ல; முழு சக்தியுடனும் உழைத்தான். எப்பொழுதும் போலவே சீராக செலவிட்டு வாழ்க்கையை நடத்தினான்.

“பணம் பணம் என்று சாகிறாயே! உன் பணம் உன்கூடவேயா வரப் போகிறது?” என்று கேலி செய்வார்கள் அவன் நண்பர்கள். அவசரக்காரர்கள் அவனைக் ‘கஞ்சன்’ என்பார்கள்.

பிறர் தூற்றலையோ போற்றலையோ அவன் பொருட்படுத்துவதில்லை. தானுண்டு, தன் வேலையுண்டு. குடும்பமுண்டு என்று இருந்து வந்தான் அவன். கையிலே சிறிது பணம் ஏறிற்று. சொந்தமாக வீடொன்றை விலைக்கு வாங்கினான். மேலும் இரண்டு மூன்று தறிகளையும் வாங்கிப் போட்டான்.

வாழ்க்கை அவனுக்கும் அவனுடைய குடும்பத்திற்கும் இனிப்பாக இருந்தது. அது இன்னமும் இரட்டிப்பாகத் தித்திக்கும் என்று அவன் எதிர்பார்த்தான்;

ஃ ஃ ஃ

“என் கண்ணுக்குக் கண்ணானவள் என் மகள் சரோசா- அவளுக்கு ஏற்ற கணவன் முத்தையன் தான். இரண்டு பேருக்கும் விரைவில் கலியாணத்தைச் செய்துவிட்டோமானால்...! பாவம்! என் அக்காள் மட்டும் உயிரோடு இருந்திருந்தால் எவ்வளவு பூரிப்படைந்திருப்பாள். ஒரே மகன் முத்தையன். என்னென்ன எண்ணியிருந்தாளோ. பாவம். செத்துப் போய்விட்டாள் சாகும்போது ‘’தம்பி,..முருகா.... என் மகனை நீதான் காப்பாற்ற வேண்டும். என் முத்தையனுக்கு நீதான் கடவுள்” என்று என்னி

டம் ஒப்படைத்தாள். அவனைப் படிக்கவைத்தேன். துடியான பயல். இன்னும் ஒரு வருஷத்தில் பத்தாவது படித்து விடுவான். அப்புறம் கலியாணத்தையும் முடித்து விடலாம். அக்காவின் ஆத்மாவும் திருப்திபடும்" என்றெல்லாம் எண்ணி முருகன் இருமாந்திருந்தான்.

ஃ ஃ ஃ

முத்தையன் கம்பீரமான தோதோற்றம்கொண்ட பதினெட்டு வயதுக்காளை. 10-வதுவகுப்பிலே படித்துக்கொண்டிருந்தான். பள்ளிக்கூடத்தில்மாணவர்கள்மத்தியிலே அவன் ஒருஎதிர்ப்பாரற்ற தலைவன். முற்போக்கு ஆர்வமும், நாட்டுப் பணியாற்றவேண்டும்என்றவேகமும் அளவற்றஅளவில் அவனிடம் குடியேறி இருந்தன. பெற்றோரில்லாக் குறையை அவனுக்குத் தெரியா வண்ணம் மாமனும்மாமியும்கவனித் துவந்தனர். எல்லாவற்றிற்கும் மேலாக மாமன் மகள் சரோஜா. அவள் 'அத்தான்" என்று வாய்நிறைய அழைக்கும்போது முத்தையனுக்கு உடம்பெல்லாம் ஆயிரம் ஆயிரம் ரோஜா இதழ்களால் ஒத்தப்படுவதைப்போல இருக்கும். அவள்மீது அவனுக்குக் "கொள்ளை" ஆசை.

சரோஜா வானத்திலே சுற்றி வட்டமிடும் வண்ணப் பூறு! மலரா மொக்கு! பள்ளியிலே படித்திருந்தாள் ஆறுவது வகுப்பு வரை. சிற்றாடை அணிந்திருந்த சரோஜா; சேலை கட்டத்தொடங்கினாள். ஏழாம் வகுப்போடு பள்ளிக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டாள். அதிகம் படிக்கவேண்டும் என்று அவள் என்னமோ ஆசைப்பட்டாள். முருகன் அதற்கு இடந்தரவில்லை. அந்த ஒரு குறையைத் தவிர அவளுக்கு வேறு ஒரு குறைவுமில்லை. அந்தக் குறையையும் முத்தையன் அவளிடம் கொண்ட அன்பு மூழ்கடித்துவிட்டது. அத்தானையே மணவாளனாகக் கொள்ளப் போகும் பூரிப்பில் உலகமே அவளுக்கு அலட்சியமாக இருந்தது.

ஃ ஃ ஃ

மாதங்கள் சில ஓடின. முருகன் வீட்டு வாசலில் இருந்த ரோஜாச் செடி சிறிது சிறிதாக வளர்ந்தது. ஒருநாள் ஒரு மொட்டு அச்செடியின் கிளை ஒன்றில் மெல்ல உலகை எட்டிப் பார்த்தது. "அது மலரும், என் தலையை அது அலங்கரிக்கும்" என்று எண்ணி அது மலரப் போகும் நாளை எதிர்பார்த்து வந்தாள் சரோஜா. ரோஜாசெடி வளர்ந்து வந்த நாட்களில் நெசவாளர் உலகத்தைத் துரதிர்ஷ்டம் மெல்ல அரிக்க ஆரம்பித்தது. ரோஜாவின் வளர்ச்சியைப்போல அதுவும் மெல்ல வளர்ந்தது. நெசவாளர் உலகத்தில் நூல் பற்றாக் குறைச் சூறாவளி பிய்த்து உதறியது. அதன் அதிர்ச்சி முருகனையும் விட்டுவிடவில்லை. மாதம் ஒன்றுக்கு 200 ரூபாய் கைநிறைய பெற்றுவந்த முருகன் இப்போது 50 ரூபாயை முழுதாகக் காண முடியாமல் அவதிப்பட்டான்.

குடும்பத்தின் கஷ்டம் மெல்ல மெல்ல அதிகரித்தது. குடும்பத்தின் கஷ்டத்தை ஓரளவாவது குறைப்பதற்காக முத்தையனின் படிப்பிற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. அவன் எப்படியோ தட்டுத்தடுமாறி ஒரு மொத்த நூல் வியாபாரியிடம் 50 ரூபாய் சம்பளத்திற்கு குமாஸ்தாவேலையும் பிடித்துக் கொண்டான். முருகனின்குடும்பம் நெசவாளர் வட்டாரத்தில் கொஞ்சம் சவுகரியமாக நடந்துவந்தது. மேலும் சிலமாதங்கள்ஓடின. பற்றாக்குறையாகநாட்டில் உலவிய நூல்நெருக்கடி பஞ்சநெருக்கடியாகமாறிற்று. இருப்பதும் பதுக்கப்பட்டது. நெசவாளர்களுக்குநூல் இல்லை; வேலையில்லை. பட்டினி நெசவாளர்களின் மென்னியைஇருக்கிப் பிடித்தது. பசிக் கொடுமை தலைவிரித்தாடியது. பட்டினிப் பட்டாளங்கள் பெருகின. கண்ணீர் கரைபுரண்டோடியது. குழந்தைக்குக்கூட கூழ் இல்லையே என்று தாய்மார்களின் இரத்தக் கண்ணீர். குழந்தையோ குழந்தை என்று குழந்தைகள் விலை பேசப்பட்டன.

மரக்கிளைகளிலே பிணங்கள் தொங்கின. குளங்களிலே மிதந்தன. "ஐயோ, ஐயோ என்ற ஒலி பரிதாபகரமாக ஒலித்தது. வீதிகளில்பட்டினி எங்கும்மரணப்படுக்கை!

சிங்கார வீதிகளாய்த் திகழ்ந்த நெசவாளர்கள் வீதிகள் அவலக் காட்சியளித்தன. இடிந்தும் சரிந்தும் வீடுகள் நாதியற்றவைபோல நின்றன!

உயிர் பிழைக்க நெசவாளர்கள் கூட்டம் கூட்டமாக வெளியேறினர். எஞ்சி நின்றவர்கள் வெகு சிலர்; முருகனைப்போல அந்தக் காலத்தில் செட்டாக இருந்தவர்கள். அவர்களும் கூட பரிதாபகரமான நிலைமைக்கே வந்து சோக பிம்பங்களாக உலவி வந்தனர்.

முருகன் இந்த நாட்களில் தறிகளை விற்றான். வீட்டை விற்றான். வாடகை வீட்டில் குடியேறினான். மெள்ள மெள்ள கையிலிருந்த பணத்தைக் கரைத்தும் விட்டான்.

நடுவில் முத்தையனுடைய வேலைக்கும் சனியன் பிடித்து விட்டது. முத்தையனுடைய முற்போக்கு ஆர்வம் அவன் முதலாளியின் வஞ்சகத்திற்கு எதிராக நின்றது. நெசவாளர்கள் நூல் கிடைக்காது தவித்த காலத்தில் அவனுடைய முதலாளி கிடைக்கக் கூடிய நூலை எல்லாம் வாங்கிப் பதுக்கிக்கொண்டுகள்ள மார்க்கெட்டில் கொள்ளையடிப்பதைக் கண்டு அவன் நெஞ்சு துடித்தது: கருப்பு இருதயத்தைக் கொண்ட அந்தக் கள்ள மார்க்கெட் காரனுக்குஎதிராக அவன் திரும்பினான். அவனுக்கு வேலை போயிற்று.

வேலையிழந்த முத்தையன் ஒரு நாள் திடீரென காணமற் போய் விட்டான். அவன் இருக்குமிடம்

சிறிது நாட்கள் வரை யாருக்கும் தெரியாமலேயே இருந்தது. சிறிது நாட்களுக்குபிறகு அவன் எங்கோ "நெசவாளர்களை சர்க்காருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்யும்படி தூண்டியதற்காக" ஆறு மாத கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டான் என்று தகவல் தெரிந்தது.

முருகன் முதலில் வேதனைப்பட்டான். அப்புறம் சற்றுமனந் தேறினான். ஆனால் சரோஜாவோ துடித்தாள், அழுதாள்; புலம்பினாள். கண்ணீருடன் ஒவ்வொரு நாளையும் கழித்தபடி ஆறும் மாத இறுதியை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

நாட்கள் பல மறைந்தன. சிறிது சிறிதாக முருகனின் வாழ்க்கையில் தோன்றிய சிறு காற்று, பெருகிப் பெரும் புயலாக மாறிச் சீறிற்று. கையிலிருந்த பணமெல்லாம் துடைக்கப்பட்டு விட்டது. வாடகை பாக்கி ஏறிக் கொண்டே போயிற்று. கடன் கொடுத்தோரின் கடுகடுப்பு அதிகமாயிற்று. சகிக்கக்கூடிய எல்லை எல்லாம் கடந்து வெகுதூரம் அவனுடைய கஷ்டம் பெருக்கெடுத் தோடியது.

பரம்பரை பரம்பரையாக நூலெடுத்து சேலைநெய்த அவன் கரங்கள் "லோயர் பவானி" அணைக்கட்டில் கல்லையும் மண்ணையும் சுமந்தன. தினப்படி கிடைக்கும் கூலியிலிருந்து சிறிது சேமித்து வீட்டிற்கு அனுப்புவான். பட்டினி இன்றி அவன் மனைவியும் சரோஜாவும் அவளுக்கிளைய இரு சிறுவர்களும் கஞ்சியாவது குடித்து வந்தனர். அதற்கும் ஒரு நாள் 'கேடு' வந்தது. சக்திக்கு மீறிய அளவு பாரமான கல்லொன்றைச் சுமந்து வந்த முருகன், சுமை தாங்காது ஒரு கணம் தடுமாறினான். தலையிலிருந்த பெருங்கல் காலில் விழுந்தது. ஆஸ்பத்திரியில் காயத்தைக் குணப்படுத்த மூன்று மாத காலமாகி விட்டது. நொண்டிக்காலனான். முருகனுக்கு 'லோயர் பவானி'யிலும் வேலையில்லை.

"எப்படி வாழ்வேன்" என்று ஏங்கினான் அவன்மனைவியும் கண்ணுக்குக்கண்ணான குழந்தைகளும் பசியால் துடிதுடித்துப்புரளுவதைக்காண அவனுக்குச்சகிக்கவில்லை. இதயத்தில் இரத்தம் கசிந்தது. இரண்டொரு நாள் தெரிந்தவர்களிடம் உதவிக்காக எதிர்பார்த்து ஏமாந்தான். அவனும் இரண்டொரு தினங்கள் சிறிது அப்பாலுள்ள இடத்திற்குச் சென்று "ஐயா ஏழைக்கு ஒரு காலணா கொடுங்கள்" என்று இறந்தும் பார்த்தான். "தடிப்பயலே" என்ற ஏச்சுத்தான் கிடைத்தது அவனுக்கு.

அன்றுதான் அவன் குடும்பத்திலேயே அதுவரை யாரும் நினைத்தறியாத ஒரு காரியத்தை அவன் செய்துவிட்டான். குழந்தைகளின் பசியையாவது தணிக்காவிட்டால் தன் இதயம் 'படீரென' வெடித்து விடுமென அவன் உணர்ந்தான்.

பக்கத்துத் தெருவில் மாடி வீடு கட்டிக்குடியேறி யிருக்கும் பரமசிவம் செட்டியார் அவனுக்குப் பழக்கப்பட்டவர்தான். பத்து வருஷங்களுக்கு முன்னால் அவரும் முருகனைப் போல ஒரு சாதாரணமான நெசவாளியாகத் தானிருந்தார். இப்போது அவர் சுமாரான பணக்காரர்களில் ஒருவர். அவர் சம்பாதித்த பணமெல்லாம் கள்ள மார்க்கெட் நூல் வியாபாரத்தில் வந்தது என்று ஊரெல்லாம் பேச்சு நிலவியது. ஊரில் ஒரு கழி நூல் கூட நெசவாளர் கண்ணில் படாதபோதும் கூட அவரிடம் பேல் கணக்கில் 'ஸ்டாக்' இருக்கும் என்று கூறிக் கொள்வார்கள்.

10 வருஷங்களுக்கு முன்னால் சாதாரண நெசவாளியாக பரமசிவம் இருந்தபோது அவருக்கும் முருகனுக்கும் இடையில் சிநேகம் கூட இருந்தது. இந்தப் பத்து வருஷ காலத்தில் அந்த நட்பு படிப்படியாகக் குறைந்து கொண்டே வந்து இப்போது 'இல்லை' என்ற அளவுக்கு வந்து நின்றது.

வேறு வழியே இல்லாத நிலைமையில் முருகன் அவரிடமாவது சென்று எதையாவது 'யாசித்து' விட்டு வரலாம்எனப் போயிருந்தான். அவன் பரமசிவத்தின் வீட்டை அடைந்த போது அங்கே நாலைந்துபேர்கள் பெரிய மனிதர்கள் போல காணப்பட்டவர்கள் அவருடன் பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் போகட்டும் என்று அவன் வாசலிலேயே காத்திருந்தான். (தொடரும்)

(2ம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களின் தேவைகளுக்கு வாங்கி அணியுமாறு வேண்டுகோள் விடுப்பதும், கைத்தறி நெசவாளர்களும் தங்களின் சொந்த உபயோகத்திற்கு கைத்தறித் துணியையல்லாது வேறு எத் துணியும் வாங்கி அணிவதில்லையென்று சபதமும் மேற்கொள்ள வேண்டும்.

அதே காலத்தில் நாம் நமது கோரிக்கையை வற்புறுத்திவிடுவதோடு நில்லாமல், நமக்குள்ள கடமையையும் உணர்ந்துகொள்ள ஆகஸ்ட 1-ந்தேதியன்று போலித்தறிகளை ஒழிப்பதிலும், தவறான கணக்கை சர்க்காரிடம் காட்டி நூல் பெற மாட்டோமென்றும் நூல் கள்ளபார்க்கெட்டை வகறுப்போமென்றும், லஞ்சம்வாங்கும் டெக்ஸ்டைல் பிராந்திய அதிகாரிகளை (டி. ஆர். ஐகளை) அம்பலப்படுத்துவோம் என்றும் சபதம் செய்து சொள்ளவேண்டும். ஆகஸ்ட் 1-ந் தேதியன்று மிக அமைதியான முறையில் ஊர்வலங்கள், கூட்டங்கள் நடத்தி நமது கோரிக்கைகளை தீர்மானங்களாக்கி மத்திய, மாகாண சாக்கார்களுக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

தவறான முறையிலோ, மக்கள்வெறுக்கத்தக்கவகைகளிலோ எவ்வித ஆபாச நடவடிக்கையும் மேற்கொள்ளக்கூடாது. அப்படி அசம்பாவிதமாக நடந்துகொள்வது பொது மக்களுக்கு நம்மீது அநுதாப உணர்ச்சி யேற்படுவதைத் தடைசெய்யும். —(ஆர்.)

காலம் மாறுகிறது; அதற்கேற்ப மக்களின் கருத்தும் மாறுகிறது!
எனவே, கைத்தறித்துணிக்கு அழகும், மெருகும் அவசியமாகிறது!

ஆகையால் நாங்கள்
மில் துணிக்கு ஈடான
முறையில் கைத்தறித்
துணி&சில்க் முதலிய
ரகங்களை

கேலண்டர்

செய்து தர இதில்
கண்ட 7 ரோலர்
மெஷினை, நவீன
முறையிலமைத்து
சேவை செய்து
வருகிறோம்.

கைத்தறி ஜவுளி
வர்த்தகர்கள்
எங்களின் சேவையை
உபயோகப்படுத்திக்
கொண்டு தங்களின்
வியாபாரத்தைப்
பெருக்கிக்கொள்ள
வேண்டுகிறோம்.

★



★

இயந்திரத்தைக்
கொண்டே
நாங்கள்
கெஜ மடிப்பும்
செய்து தருகிறோம்.

★

: விவரங்களுக்கு :

S. DORAISWAMY MUDALIAR & CO.,

CLOTH FINISHING PRODUCERS,

FORT, : : ERODE.

Edited & Published by: M. K.